# சமாதான நோக்கு

குரல் 3 நோக்கு 1
ஏப்ரல் 2003

**சமஷ்டிச் சிறப்பிதழ்**




# சமஷ்டி முறையும் இலங்கையின் தெரிவும்

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து / ரொஹான் எதிரிசிங்க / எரந்தி பிரேமரட்ண / அசங்க வெலிகல
மிலிந்த மொரகொட / கலாநிதி ஜயந்த செனிவிரத்ன

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

படம் : சிறியந்த வல்பொல
இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு பெற்றது
அட்டை H.D.S. இந்திரஜித் விதுமா கிராபிக்ஸ்



*நிலைத்திட வேண்டுமம்மா* ........

.........

.........

அகதி முகாம்களில் முடங்கிக் கிடந்த நாம் எமது இருப்புக்களை நோக்கிய பயணம். இவை பற்றிய மேற்கூறிய கவிதை வரிகளைப் பூரணப்படுத்துங்கள். முதலாம் பரிசு ரூ 500 மற்றும் புத்தகங்களும், ஐந்தாமிடம் வரை புத்தகப் பொதிகளும் வழங்கப்படும். சிறந்த படைப்பு அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

"சமாதான நோக்கு" மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் முரண்பாடு மற்றும் சமாதான ஆய்வுப் பிரிவின் வெளியீடு. மா.கொ.நி பொதுமக்கள் கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பும், அதனை பலப்படுத்தலும் அவசியமென கருதுகின்றது. முரண்பாடு மற்றும் சமாதான ஆய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மா.கொ.நி ஆட்சிமுறை மற்றும் மோதல் தவிர்ப்புக் குறித்தான பிரச்சினைகளில் அவதானம் செலுத்துகின்றது. "சமாதான நோக்கு" வெளியீடு இன நெருக்கடியைத் தீர்க்க பங்களிப்புச் செய்யும் பிரச்சினைகள் குறித்தும், பொதுமக்கள் மத்தியில் ஒரு கூட்டான செயற்பாட்டை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டும் செயற்படுகின்றது.

**மேலதிக விபரங்களுக்கு :**

ஒருங்கிணைப்பாளர்,
முரண்பாடு மற்றும் சமாதான ஆய்வுப் பிரிவு,
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்,
32/3, பிளவர் வீதி, கொழும்பு - 07
தொ. பே : 94-1-565304/06 பக்ஸ் : 94-74-714460
ஈ-மெயில் : cpa@sri.lanka.net

குரல் 3, நோக்கு 1 ஏப்ரல் 2003

## மாற்றுக் கண்ணோட்டம்

ஐக்கிய இலங்கையுள், சமஷ்டிக் கட்டமைப்பினுள், தமிழ்பேசும் மக்களின் வரலாற்று வாழிடங்களில் உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலான அரசியல் தீர்வொன்றை ஆய்வு செய்யும் உடன்பாட்டுக்கு அரசாங்கமும், எல்ரீரீஈ அமைப்பும் வந்திருப்பது இலங்கையில் மோதல் நிலைமாற்றச் செயல்முறையில் சமஷ்டி எண்ணக்கருவை முன்னுக்குக் கொண்டு வந்துள்ளது. மேலும், அது இலங்கையில் அரசியல் கலந்துரையாடல் செயல்முறையில் சமஷ்டி என்னும் சொல்லோடு கலந்திருந்த இழுக்கான அர்த்த விளக்கங்களையும் ஓரளவுக்கு அகற்றியுள்ளது. தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டதும், வேண்டுமென்றே திரித்துக் கூறப்பட்டதுமான சமஷ்டி நாட்டைப் பிரிவினைக்கும், சீரழிவுக்கும் இட்டுச் செல்லும் நிச்சயமான வழியென்று இத்தனை காலமும் அவதூறாகப் பேசப்பட்டு வந்தது. உள்ளூர் சூழமைவில் இது என்றுமே சாத்தியப்படாத ஒன்றென்றும், யதார்த்தத்துக்கு ஒவ்வாததென்றும் கூறப்பட்டிருந்தது.

2002 டிசம்பர் 5ந் திகதிய ஒஸ்லோ பிரகடனத்தின் பின்னர் இந்த நிலைமை மாறி விட்டது. சமஷ்டி என்பதை அனைவரும் பாரதூரமாக நோக்கும் நிலை தோன்றியுள்ளது. இது இலங்கையில் ஒரு புதிய சமூக ஒப்பந்தம் மற்றும் அரசியலமைப்பு நடைமுறைக்கு வருவதற்கான அத்திவாரத்தை இடுவதற்கான முதற்படியாகவும் அமையக்கூடும். ஒற்றையாட்சி சம்பந்தமான அழுங்குப்பிடிக் கருத்தைக் கொண்டிருந்த ஓர் அரசும், பிரிவினை நோக்கத்தைப் பற்றிக் கொண்டிருந்த ஓர் அமைப்பும் விட்டுக் கொடுப்புகளைச் செய்து, பகைமையைக் களைந்து, எதிர்காலத்தில் சகவாழ்வுக்கான வழியாக சமஷ்டியை ஏற்றுக் கொள்ளும் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஜனநாயக ஆட்சிமுறை மற்றும் மோதல் நிலை மாற்றம் குறித்த பொதுக்கொள்கை விவாதத்துக்கான சிவில் சமூகப் பங்களிப்பை வலுப்படுத்தும். அதன் பணிப்பாணையை நிறைவேற்றும் வகையில் இந்த 'சமாதான நோக்கு', 'சாமவிமாசி' மற்றும் 'பீஸ் மொனிட்டர்' என்பவற்றின் விசேட இதழ்களை வெளியிட்டு வைக்கின்றது. இது கனடாவிலுள்ள சம்மேளனங்களின் ஒன்றியத்தின் சர்வதேச வலைப்பின்னலமைப்பின் நிதி உதவியுடன் சாத்தியமாகியுள்ளது. இந்த அமைப்பு அரசியலமைப்புப் பிரச்சினைகள் குறித்த இரு தரப்பினரின் பேச்சுவார்த்தைகளுக்கும் மூலவளங்களை வழங்கி வருகின்றது.

## இலங்கையில் சமாதானமும், ஜனநாயகமும் : சமஷ்டி எண்ணக்கருவோடு பரிச்சயமுறுதல்

- கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து -

இந்த விசேட வெளியீடு இலங்கையில் சமாதானச் செயல்முறை சம்பந்தமான மிகப் பரந்த நலன் பிரதிநிதிகளிடையே சமஷ்டி குறித்த விவாதத்தை ஊக்குவிக்கவும், அதற்குத் தகவல் வழங்குவதற்கும் அர்ப்பணிப்புணர்வு கொண்ட ஒன்றாகும். இது சமாதானச் செயல்முறைக்குப் பொதுமக்களின் ஆதரவும், சட்ட நிலைத்தகவும் இருக்க வேண்டுமாயின் அதற்கு அறிவுபூர்வமானதும், அனைவரும் பங்கேற்பதுமான விவாதமொன்று அவசியம் என்னும் உறுதியான விசுவாசத்திலிருந்து ஊற்றெடுத்த ஒன்றாகும். மேலும், பிரச்சினைக்கு அரசியல் மற்றும் அரசியலமைப்பு ரீதியான தீர்வொன்றைத் தேடுவது இலங்கையில் சமூக ஒப்பந்தத்தையும், அரசையும் மீள்சிந்தனை மற்றும் மீள்கட்டமைப்புக்கு உட்படுத்துவதாகும். பொதுமக்கள் ஆதரவும் சட்டநிலைத்தகவும் இல்லையெனில் நிலையான சமாதானமோ, ஜனநாயக ஆட்சி முறைக்கான காத்திரமான அடித்தளமோ உருவாக மாட்டாது.

சமஷ்டி என்னும் எண்ணக்கரு இலங்கையின் அரசியல் மற்றும் அரசியலமைப்பு விவாதத்தில் புதிய ஒன்றல்ல. அது 1920களில் சர்வஜன வாக்குரிமை மற்றும் சுயாட்சிக்கான முயற்சிகளின் போது கண்டியச் சிங்களவர்களாலும், திரு.எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவினாலும் முன்வைக்கப்பட்ட ஒன்றாகும். குடியேற்றவாத ஆட்சியாளர்கள் இதைச் சுயாட்சிக்குரிய ஒரு சட்டகமாக ஏற்றுக் கொள்ள மறுத்த போதிலும், இது இரு தசாப்தங்களின் பின்னர் குடியேற்றவாத காலத்துக்குப் பிந்திய அரசின் ஆரம்ப வருடங்களின் போது தமிழ்க்கட்சியொன்றின் அடிநாதக் கருத்தாக மீள் பரிமாணம் பெற்றது. மலையகத் தமிழ் சமூகத்தின் வாக்குரிமை பறிக்கப்பட்ட பாரபட்ச நடவடிக்கையே சமஷ்டிக் கட்சியின் தோற்றத்துக்கு வழிசமைத்ததென்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். எழுபதுகளின் நடுப்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் (தவிகூ) ஒன்றிணையும் வரையில் இக்கட்சி தமிழர்களின் பிரதான அரசியல் கட்சியாக விளங்கியது. தவிகூ இப்பொழுது தமிழ் தேசிய முன்னணியின் பிரதான அங்கமாகும். 1970களில் எமது சொந்த மண்ணில் இடம்பெற்ற அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகளின் போது சமஷ்டிக் கட்சி முன்வைத்த சமஷ்டி மாற்றுயோசனை நிராகரிக்கப்பட்டது. இது இனப்பிரச்சினையை மேலும் உக்கிரமாக்கி தமிழ் மக்களிடையே பிரிவினைவாத இலட்சியம் மேலோங்க வழி சமைத்தது. அழிவு நிறைந்த.

ஆசிரியர் : **பாக்கியநாதன் விஜயசாந்தன்**

ஆசிரியர் குழு : **கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து**
**கேதீஸ்வரன் லோகநாதன்**
**சுனந்த தேசப்பிரிய**
**ரொஹான் எதிரிசிங்க**

தொடர்புகளுக்கு : **24/2, 28வது ஒழுங்கை, ஓவ் பிளவர் வீதி, கொழும்பு-07, இலங்கை**
**தொ.பே. 94-1565304/6 பக்ஸ் 94-74-714460** ஈ-மெயில் cpa@sri.lanka.net

**இதிலுள்ள கருத்துக்கள் மா.கொ. நிலையத்தினையோ, அதன் பணிப்பாளர் சபையினையோ பிரதிபலிக்கும் கருத்தாகாது.**

இரத்தம் சிந்திய இரு தசாப்தகால ஆயுதப் போராட்ட வழிமுறை மூலம் மீண்டும் சமக்ஷ்டிக்கு மீண்டிருப்பது பிரதான அரசியல் சிந்தனைப் போக்கில் வெளிப்படையான குறிப்பிடத்தக்க மாற்றத்தையே காட்டி நிற்கிறது. அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் மாகாணசபை முறைமை(1987-88) மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி அதிகாரப் பகிர்வு யோசனைகள் (1995 மற்றும் 1997) மற்றும் அதன் நிறைவேறாக 2000 ஆகஸ்ட் அரசியலமைப்புச் சட்டமூலம் என்பவற்றினூடாக, ஒற்றையாட்சி எண்ணக்கருவைவிட்டு விலகிச்செல்லும் பூரணமற்ற போக்கு, ஒஸ்லோ பிரகடனத்தின் மூலம் அதன் இறுதி இலக்கை அடைந்தது. ஆகவே மோதல் நிலைமாற்றச் செயல்முறையில் சமக்ஷ்டி எண்ணக்கருவின் அவசியத்தையும் அதன் உபயோகத்தையும் ஏற்றுக் கொண்டமை மனதின்றி, படிப்படியாக இடம்பெற்றதும், மோதல் தீர்வுக்கு அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை உபயோகிக்கும் ஒன்றரை தசாப்தகால பரிசோதனை முயற்சிகளின் பெறுபேறுமாகும்.

அதிகாரப்பகிர்வு மூலம் சுயாட்சி மற்றும் பகிர்வு ஆட்சி என்பவை சமக்ஷ்டி எண்ணக்கருவின் உள்மையக்கருத்தாக விளங்குகின்றன. அடையாளத்தை அடிப்படையாகக் கொண்ட மோதல்களில் மோதல் நிலைமாற்றத்துக்கு இது உகந்ததென்று விதந்துரைப்புப் பெறும் காரணமும் இதுவேயாகும். இது மத்தியில் அதிகாரமனைத்தும் குவிக்கப்படுகின்ற ஒற்றையாட்சி முறைக்கு நேரெதிரானதாக நோக்கப்படுதல் வேண்டும்.

இதன் பிரகாரம் சுயாட்சி சுதந்திரம் மற்றும் ஐக்கியம் என்பவை ஒரு ஆட்சிமுறைச் சட்டகத்தில் ஒன்றிணைக்கப்படுவது சமக்ஷ்டியின் பிரதான கவர்ச்சிகரமான அம்சமாகும். ஒஸ்லோ பிரகடனத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சவால் இதை இலங்கைகளில் யதார்த்தமாக்கும் முயற்சியாகும்.

கரிசனை கொண்ட வெகுஜனங்களிடையே சமக்ஷ்டியின் பிரதான அம்சங்கள் குறித்தும், ஓர் அரசாங்க முறைமை என்ற வகையில் அதன் தொழிற்பாடுகள் குறித்தும் தகவலும், அறிவும் குறைவாகவே காணப்படுவது போன்று, பிரதான தரப்பினராகிய இலங்கை அரசாங்கம் மற்றும் எல்ரீரீஈ அமைப்பினரிடையே ஒரு பொதுவான விளக்கம் குறைவாகவே உள்ளது. சமக்ஷ்டி எண்ணக்கரு கூட்டுச்சமக்ஷ்டியென்று பொதுவாக எண்ணப்படும் அரசாங்க முறைமையும் உள்ளடக்கிய ஒன்றாகவே அமைய வேண்டுமா என்பது இத்தகைய கரிசனை விடயங்களுள் ஒன்றாகவுள்ளது. வேறு சிலர் பொலிஸ், நிதி மற்றும் நீதி நிர்வாகத்தில் சமக்ஷ்டி முறையில் இணையும் அலகுகளினதும், மத்தியினதும் அரசாங்கங்களின் பாத்திரங்கள் மற்றும் அவற்றினிடையிலான உறவுகள் குறித்துப் பேசுகின்றனர்.

இது சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது, மோதலில் சம்பந்தமுற்ற இருதரப்பினராலும் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினையாகும். இதற்கு அமைப்புகள் மற்றும் சமூகங்களின் அரசியல் தேவைகளும், அரசியல் நலன்களும் கருத்திற் கொள்ளப்படுவதும், சமநிலைப்படுத்தப்படுவதும் அவசியமாகும். ஆயினும் அர்த்தமுள்ள சமக்ஷ்டியை ஆக்கும் குறிப்பிட்ட அடிப்படை அம்சங்கள், கோட்பாடுகள் மற்றும் விழுமியங்கள் குறித்த நிறுவக மற்றும் நடைமுறை வெளிப்பாடுகளை அங்கீகரித்து ஏற்றுக்கொள்வதை உதாசீனம் செய்ய வழியில்லை. சுயாட்சி, பகிர்வு ஆட்சி, தன்னாட்சி, பரஸ்பரம் தங்கிநிற்றல் மற்றும் ஐக்கியம் என்பவற்றை உறுதி செய்வதற்கு இது அவசியம் என்பதோடு இது பின்வரும் விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது:

- அரசியலமைப்பு மேலோங்கும் உயர்தன்மை : மத்திய அரசினதும் சமஷ்டி அலகுகளினதும் அதிகாரங்களைத் தெளிவாக வரையறுக்கும் ஓர் எழுதப்பட்ட அரசியலமைப்பு.
- மத்திய அரசுக்கும் சமஷ்டி அலகுகளுக்குமிடையில் எழும் அதிகாரப் பகிர்வு மற்றும் அதிகார விநியோகம் குறித்து எழும் பிணக்குகளுக்குத் தீர்வுகாணும் பக்கச் சார்பற்ற நடுவராகக் கருமமாற்றும் நாட்டின் அதியுயர் நீதிமன்றமாகிய உயர்நீதிமன்றம்.
- சர்வதேச மனித உரிமை நியமங்களுக்கு ஏற்ற வகையிலான சகல பிரஜைகளுக்குமான அடிப்படை உரிமைகள் சாசனம்.
- மத்தியில் சட்டவாக்கம் இடம்பெறுகையில் சமஷ்டி அலகுகளுக்கு உரிய முறையில் பிரதிநிதித்துவம் கிட்டக்கூடிய வகையிலமைந்த இரண்டாவது சபை.
- சமஷ்டி அலகுகளுக்குப் போதிய நிதி மூலவளங்கள்.

பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் சமக்ஷ்டியின் நியம, நிறுவன நடவடிக்கைமுறைச் சட்டகத்தினுள் அரசியலமைப்புத் தீர்வொன்றை எட்டுவார்களா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். அது இலகுவான ஒரு விடயமாக இருக்க மாட்டாது. அதிகாரப்பகிர்வுக் கலந்துரையாடலுக்கு முன்னராக ஆட்புலப் பிரச்சினைகள் மற்றும் சமச்சீரற்ற அதிகாரப்பகிர்வுக் கோட்பாடு என்பவை குறித்த உடன்பாடு எட்டப்படுதல் வேண்டும். மேலும், அவசியப்படுவது ஓர் அரசியலமைப்புத் தீர்வு என்பதாலும், அது பயனுறுதியைப் பொறுத்தவரையில் ஒரு புதிய சமூக ஒப்பந்தம் மற்றும் அரசு என்பவற்றை உள்ளடக்குவதாலும், இனமோதல் சூழமைவு எவ்வாறு இருந்தபோதிலும், சமக்ஷ்டியென்பது ஒரு பயனுறுதியுள்ள ஆட்சிமுறைச் சட்டகமென்பதை வலியுறுத்தும் காத்திரமான வாதங்கள் முன்வைக்கப்பட வேண்டியுள்ளன. அரசியல் அமைப்பு ஆக்கச்செயல்முறை பரந்த வீச்சிலான நலன் பிரதிநிதிகளை நேரடியாகச் சம்பந்தப்படுத்தும் வகையில் முன்னேறுகையில் இது இடம்பெறுமென்பதில் சந்தேகமில்லை. சமக்ஷ்டி எமது தற்போதைய துன்பங்கள் அனைத்தையும் போக்கக்கூடிய அற்புத நிவாரணி அல்லவென்பதையும், அங்கீகரிக்கப்பட்டுத் தொழிற்படத் தொடங்கையில் பல்வேறு குறைபாடுகள் தென்படுமென்பதையும், அவற்றுக்குப் பரிகாரங்கள் காணப்படுவது அவசியமென்பதையும் இவ்விடத்தில் கூறுவது பொருத்தமானதாகும். பயனுறுதியைப் பொறுத்த வரையில் ஜனநாயக அமைதிக்கும், ஆட்சிமுறைக்குமான சமக்ஷ்டிக் கருத்திட்டம் தொடர்ந்து முன்னேறும் ஒரு பணியாகவே அமையும். ஆயினும், ஒற்றையாட்சியின் கீழ் ஐந்தரை தசாப்தகால இனத்துவ பகைமை மற்றும் மோசமடையும் ஆட்சிமுறை என்பவற்றை நோக்குகையில் சமக்ஷ்டியென்பது எமது அரசியல் மற்றும் அரசியலமைப்பு பரிணாம வளர்ச்சிப்பாதையில் பிரத்தியட்சமான ஒரு தெரிவாகவே அமைகின்றது.

சமக்ஷ்டியை நாம் அறிந்து கொண்டு, எமது தேவைகளுக்கு ஏற்றவகையில் அதை வகுத்தமைத்து, அதைத் தொழிற்பட வைக்க வேண்டிய அவசியமுள்ளது. இது கருத்துணர்வைத் தூண்டுவது போலவே, விரக்தியுணர்வை ஏற்படுத்தக்கூடியதுமாகும். இதில் அரசியல் கலாசாரம், நிறுவனங்கள் மற்றும் செயல்முறைகளில் நிலைமாற்றம் ஏற்படுதல் வேண்டும். ஆகவே, ஒரு புதிய இலங்கையர்கள் என்ற ரீதியில் நாம் இதில் சம்பந்தமுறுவதும், எமது உரிமைகள் மற்றும் கடமைகளை ஏற்றுக் கொள்வதும் அவசியமாகும்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இந்த முயற்சிக்கான பங்களிப்பாகவே இந்த விசேட சமக்ஷ்டி இதழை வெளியிடுகின்றது. இதன் மூலம் அது சமக்ஷ்டி குறித்த கலந்துரையாடல் அறிவார்ந்த ஒன்றாக மாறுமென்றும், அத்தோடு இலங்கையில் சமாதானத்துக்கும், ஜனநாயகத்துக்குமான ஆக்கபூர்வமான விளைவுகளை ஏற்படுத்துமென்றும் நம்புகின்றது. ■

கொழும்பு பல்கலைக்கழகச் சட்ட பீடத்தின் அரசியலமைப்புச் சட்ட விரிவுரையாளரும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளருமான ரொஹான் எதிரிசிங்க அவர்களுடன் ஒரு நேர்காணல் 4

10 சமஷ்டிமுறை பற்றிய அடிப்படை அறிமுகம்
எரன்தி பிரேமரட்ண

சமஷ்டிக் கொள்கை என்றால் என்ன? 14

17 ஜனநாயகப்படுத்தலும் முரண்பாட்டுத் தீர்வும்
இலங்கையில் சமஷ்டி ஆட்சிமுறையை ஏற்படுத்துவதற்கான நியாய விளக்கம்
அசங்க வெலிக்கல


சமஷ்டித் தீர்வு குறித்து உடனடி இணக்கப்பாட்டை எதிர்பார்க்க வேண்டாம் 23
மிலிந்த மொரகொட

29 அரசைக் கட்டியெழுப்பும் பலம் வாய்ந்த சங்கிலி
கலாநிதி ஜயந்த செனிவிரத்ன

தேசிய இன முரண்பாடுகளுக்கு சமஷ்டி முறை மூலம் தீர்வு 39
பி.எம். அபூபக்கர்

43 முஸ்லிம் மக்களுக்கும் சகல உரிமைகளும் அவசியம்
யூ.எல்.எம். மொஹிதீன்

## கொழும்பு பல்கலைக்கழகச் சட்ட பீடத்தின் அரசியலமைப்புச் சட்ட விரிவுரையாளரும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளருமான றொஹான் எதிரிசிங்க அவர்களுடன் ஒரு நேர்காணல்



**இலங்கை அரசாங்கமும், எல்ரீரீஈ அமைப்பும் ஐக்கிய இலங்கையினுள் சமஷ்டி மற்றும் உள்ளக, சுய-நிர்ணயத்தின் அடிப்படையிலான அரசியல் தீர்வொன்றை ஆய்வு செய்வதற்கு இணங்கியுள்ளனர். இது ஒரு முக்கியமான முன்னேற்றமென்று எண்ணுகின்றீர்களா?**

இந்த உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதும், இதன் சாத்திய மட்டுப்பாடுகள் குறித்து அறிந்து கொள்வதும் முக்கியமானதென்று நான் கருதுகின்றேன்.

ஆக்கபூர்வமான பக்கத்தை நோக்கினால், அரசாங்கம் இறுதியில் ஒற்றையாட்சி முறைமையினுள் அர்த்தமுள்ள, பாதுகாப்பான அதிகாரப் பகிர்வை அடைய முடியாதென்பதை ஏற்றுக் கொண்டுள்ளதையே இது காண்பிப்பதாக அமைகின்றது. எல்ரீரீஈ தனி அரசு ஒன்றுக்கு மாற்றீடாக சுயாட்சி மற்றும் பகிர்வு ஆட்சி என்னும் கருத்துள்ள 'சமஷ்டி' என்பதை ஏற்றுக் கொள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது. இது மத்திய அரசு ஒப்பீட்டளவில் பலவீனமானதும், பகிர்வு ஆட்சியைவிட, கூடுதலான சுயாட்சியைக் கொண்ட, அரசியல் ஏற்பாடாகிய 'கூட்டுச்சமஷ்டி' என்பதற்கு இரு தரப்பினருக்குமிடையிலான இடைவெளி குறைந்துள்ளதோடு, நாட்டிலுள்ள சகல ஜனசமூகங்களிடையிலும் மிதவாத அபிப்பிராயத்துக்கு ஏற்புடைத்தான இடமளிப்பு மற்றும் அரசியலமைப்பு ரீதியான விட்டுக்கொடுப்பு என்பவற்றுக்கான் சாத்தியமும் அதிகரித்துள்ளது.

வெறுப்பு வேதாந்தம் பேசுவோர் எல்ரீரீஈ அமைப்பு இரு பிரதான அரசியல் கட்சிகளான

*தமிழ் மக்களின் உள்ளக சுயநிர்ணய எண்ணக்கருவுக்கான அங்கீகாரம், தமிழ் மக்களின்/ தமிழ்பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடங்கள் சம்பந்தமான பிரச்சினை, இணைப்புக்குறித்த சிக்கலான பிரச்சினை, வடக்கு–கிழக்கில் சிறுபான்மையினங்களின் உரிமைகள் குறித்த பிரச்சினை போன்றவற்றுக்கு உரிய அரசியல் தீர்வை அவசியப்படுத்தும்.*

ஐ.தே.கவும், ஸ்ரீ.ல.சு.கவும் சமஷ்டி அரசியலமைப்பொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான அரசியல் கருத்தொருமிப்பை என்றுமே எட்டமாட்டா என்பதை அறிந்து வைத்திருப்பதாலேயே சமஷ்டித் தீர்வுக்குச் சம்மதம் தெரிவித்துள்ளதென்று தெரிவிக்கின்றனர். இந்த இரு கட்சிகள் மற்றும் அவற்றின் தலைமைத்துவங்களிடையில் பகைமை மற்றும் கசப்புணர்வு மற்றும் அரசியல் அதிகாரத்துக்கான தீவிர போராட்டம் என்பவற்றை வைத்து நோக்குகையில், பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்த காலத்திலிருந்தே நிகழ்ந்ததைப் போன்று மோதல் குறித்த அரசியல் தீர்வுக்கு அவசியமான விட்டுக்கொடுப்பை ஒரு கட்சி செய்வதை மறுகட்சி ஒருநாளும் அனுமதிக்கப் போவதில்லையென்பதை எல்ரீரீஈ அமைப்பு அறிந்து வைத்திருப்பதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

பேச்சுவார்த்தைகள் முன்னேறுகையில் தெளிவுபடுத்தப்பட வேண்டிய இன்னுமொரு விடயம் ஒரு சமஷ்டி மாதிரியை உள்ளக சுய-நிர்ணய எண்ணக்கரு, எவ்வாறு பாதிக்கும் என்பதாகும். தமிழ் மக்களின் உள்ளக சுய-நிர்ணய எண்ணக்கருவுக்கான அங்கீகாரம் தமிழ் மக்களின்/தமிழ்பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடங்கள் சம்பந்தமான பிரச்சினை, இணைப்புக்குறித்த சிக்கலான பிரச்சினை, வடக்கு-கிழக்கில் சிறுபான்மையினங்களின் உரிமைகள் குறித்த பிரச்சினை போன்றவற்றுக்கு உரிய அரசியல் தீர்வை அவசியப்படுத்தும். இது அனேகமாக அரசியல் தீர்வை வடக்கு, கிழக்குக்கு கூடுதலான அதிகாரங்கள் பகிர்வு செய்யப்படும் சமச்சீரற்ற சமஷ்டியை நோக்கித் தள்ளுவதாகவே அமையும்.

கடந்த ஜனவரி மாதத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நான் பங்குபற்றிய கருத்தரங்கொன்றில் பல புத்திஜீவிகள் ஒஸ்லோ ஆவணத்தில் இடம்பெற்ற சமஷ்டி என்னும் பதம் பரந்த ஒரு பொதுவான பதமாக உபயோகிக்கப்பட்டதென்றும், அதன் அர்த்தம் மரபு ரீதியான சமஷ்டி ஏற்பாட்டிலிருந்து இரு தேசங்கள் இணையும் ஒரு கூட்டுச் சமஷ்டி வரை எதுவாகவும் இருக்கலாமென்றும் கருத்துத் தெரிவித்தனர். இத்தகைய ஒரு மதிப்பீடு சரியெனில், ஓர் அரசியல் தீர்வின் வரைவெல்லைகள் குறித்த ஒஸ்லோ உடன்படிக்கை அனைவரும் முன்பு எண்ணியது போன்று அத்துணை ஆக்கபூர்வமான ஒன்றல்ல.

**சமஷ்டி அரசியலமைப்புக்கும், கூட்டுச்சமஷ்டி அரசியலமைப் புக்கும் இடையிலுள்ள வேறுபாடு என்ன?**

சமஷ்டி என்னும் பதத்துக்கு நிலையான, துல்லியமான அர்த்தம் கிடையாது. இது நெகிழ்ச்சித்தன்மைமிக்க ஓர் எண்ணக்கரு என்பதோடு, அது பல்வேறு அளவுகளிலான அதிகாரப்பகிர்வு நிலைகளைத் தழுவி நிற்கக்கூடும். மத்திய அரசு மிகவும் பலமாகவுள்ள இந்தியா போன்ற சமஷ்டி அரசியலமைப்புகள் உள்ளன. பிராந்தியங்கள் மிகவும் பலமான நிலையிலுள்ள சுவிட்சர்லாந்து போன்ற சமஷ்டி

அரசியலமைப்புகள் உள்ளன. கனடா போன்ற சில நாடுகளில் சமஷ்டி அரசியலமைப்பு அறிமுகம் செய்யப்பட்டபோது மத்திய அரசு பலமானதாக விளங்கியது. ஆயினும், காலப்போக்கில் பிராந்தியங்கள் அல்லது மாகாணங்கள் பலம் மிக்கவையாக மாறியுள்ளன. நான் முன்பே கூறியது போன்று ஒரு கூட்டுச் சமஷ்டி அரசியலமைப்பில் பிராந்தியங்கள் பலமாக விளங்குவதோடு, பகிர்வு ஆட்சியைவிட சுயாட்சியே அதிகமாகக் காணப்படும். அனேகமான சந்தர்ப்பங்களில் முன்னர் சுதந்திர அரசுகளாக விளங்கியவை ஒருங்கிணைந்து ஒரு புதிய தேச அரசை உருவாக்கும் போது கூட்டுச்சமஷ்டி அரசொன்று ஏற்படுகின்றது. பொதுவாக கூடுதலான மரபுவழி சமஷ்டி அரசியலமைப்புகள் முன்னர் ஒற்றையாட்சியாக விளங்கிய அரசசொன்றில் அதிகாரங்களைப் பகிர்வு செய்வதன் மூலம் அது ஒரு சமஷ்டி அரசாக மாறுகின்றது. (அதிகாரப்பகிர்வுச் சமஷ்டி). அல்லது சுதந்திர அரசுகள் ஒன்றாக இணைவதன் மூலம் சமஷ்டி அரசு ஏற்படுகின்றது. (ஒருங்கிணைப்புச் சமஷ்டி). எல்ரீரீஈ அமைப்பு மீது பரிவுகொண்ட பல வெளிநாட்டுத் தமிழ் அரசியல் குழுக்கள் கடந்த 5-6 வருடங்களாக இறுக்கமற்ற கூட்டு ஒன்றைக்கொண்ட ஓர் இருதேச கூட்டுச்சமஷ்டியையே ஆதரிக்கின்றன. நான் மேலும் மரபுரீதியான சமஷ்டி ஏற்பாட்டையே வலியுறுத்துகின்றேன். ஒற்றையாட்சி முறையிலிருந்து கூட்டுச் சமஷ்டிக்குச் செல்வது மிகவும் பாரிய ஒரு பாய்ச்சல் நடவடிக்கையாகும்.


**1787 இல் அமெரிக்க சமஷ்டி அரசியலமைப்பை ஆக்கியோர் சமூகத்தில் அதிகாரத்தைப் பிரித்துச் சமநிலைப்படுத்துவதன் மூலம் சுதந்திரத்தைப் பாதுகாப்பது சம்பந்தமாகவே கரிசனை செலுத்தியதாகக் கூறப்படுகின்றது. இது இலங்கைக்கும் பொருந்தக்கூடிய ஒரு விடயமா?**

> *"என்னைப் பொறுத்தவரையில் 1972இல் முதலாவது குடியரசு அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட்டபோது ஜனநாயகத்தின் சீரழிவு ஆரம்பமாகியதென்று கருதுகின்றேன்."*

ஆம், பொருந்தும். நாம் சமஷ்டி குறித்து உரையாடும் போது அதிகாரப்பகிர்வு மற்றும் சுயாட்சி மாத்திரமின்றி அதன் ஏனைய அம்சங்கள் குறித்தும் கவனம் செலுத்துதல் வேண்டும். ஒன்றுக்குப் பதிலாக இரண்டு மட்டங்களிலான அரசாங்கங்கள் இருப்பதும், மத்தியில் அதிகாரம் குவிக்கப்படாமலிருப்பதுமே இதற்கான காரணங்களாகும். அதிகாரப் பிரிவு அல்லது அதிகாரம் கலந்தூடு பரவுதல் என்பது இடம்பெறுகின்றது. உண்மையில், பூரணமான அதிகாரம் பூரணமான ஊழலையே ஏற்படுத்துமென்று கூறிய தாராளவாதச் சிந்தனையாளராகிய அக்டன் பிரபு சமஷ்டி இணைவு அதிகாரத் துஷ்பிரயோகத்திற்கெதிரான மிகச்சிறந்த பயனுறுதியுள்ள தடை ஏற்பாடென்று தெரிவித்துள்ளார்.

என்னைப் பொறுத்தவரையில் 1972இல் முதலாவது குடியரசு அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட்டபோது ஜனநாயகத்தின் சீரழிவு ஆரம்பமாகியதென்று கருதுகின்றேன். அது தேசிய அரசப்பேரவை என்றும் மத்திய அரசியல் நிறுவனத்தில் சகல அதிகாரங்களையும் குவித்தது. இதே அரசியலமைப்பில் இலங்கை ஓர் ஒற்றையாட்சி அரசு என்ற கோட்பாடும் உள்ளடக்கம் பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும். ஒற்றையாட்சி அரசியலமைப்புகள் அதிகாரத்தை ஓரிடத்தில் குவிப்பதால் சர்வாதிகார அரசியல் தலைவர்களும், இடதுசாரி மற்றும் வலதுசாரி ஆட்சிக்குழுக்களும் அதை விரும்புகின்றனர். சமஷ்டி அரசியலமைப்புகள் அதிகாரம் ஓரிடத்தில் குவிவதைத் தடுப்பதால் அவற்றை அவர்கள் விரும்புவதில்லை.

ஆகவே, சமஷ்டியென்பது ஜனநாயகத்துடனும், பல்லினப்பாங்குடனும் பின்னிப்பிணைந்த ஒன்றாகும். பன்மைப்பாங்கை அங்கீகரிக்காத ஒற்றையாட்சியில் உண்மையான அதிகாரக் கலந்தூடுபரவுதல் இருக்க மாட்டாது. ஐக்கிய சோவியத் சோஷலிஸக் குடியரசுகளினதும், யூகோஸ்லாவினதும் முன்னாள் அரசியமைப்புகள் பெயரளவுக்கு மாத்திரம் சமஷ்டித் தன்மையைக்



கொண்டிருந்தன. சமஷ்டி அரசை விமர்சிப்போர் இந்த நாடுகள் பிளவடைந்தமை சமஷ்டித்தன்மை காரணமாகவே என்று கூறுகின்றனர். இவை ஜனநாயகத் தன்மையோ, பல்லினப் பாங்கையோ கொண்டிராததால் அவை சமஷ்டி அரசுகள் அல்லவென்பது எனது வாதமாகும். அவை ஜனநாயகத் தன்மை கொண்ட உண்மையான சமஷ்டி அமைப்புகளாக இருந்திருந்தால் அவற்றின் வரலாறு மிகவும் வித்தியாசமாக அமைந்திருக்கும்.

இலங்கையில் இனப்பிரச்சினையொன்று உள்ளதென்பதை நாம் மறந்து விடக்கூடாது. ஆயினும் ஜனநாயகம் மற்றும் வகைப்பொறுப்பு குறித்த ஒரு நெருக்கடியும் இங்கு நிலவுகின்றது. ஒரு சமஷ்டி அரசியலமைப்பு இந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண உதவும்.

**நீங்கள் ஒரு புதிய சமஷ்டி அரசியலமைப்பின் ஒரு பகுதியாக ஓர் இரண்டாவது சபையை வலியுறுத்தியுள்ளீர்கள். ஏன்?**

சோல்பரி அரசியலமைப்பின் கீழ் உருவாகிய செனட் சபை வெற்றியளிக்கவில்லை என்பதே இலங்கையின் அனுபவமாகவுள்ளது. மத்தியில் பிராந்திய பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கு ஒரு புதிய சமஷ்டி அரசியலமைப்பில் இரண்டாவது சபையொன்று இருப்பது வாழ்வாதாரமான முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகும். சோல்பரி அரசியலமைப்பின் கீழான செனட்சபை இத்தகைய ஒரு கருமத்தை நிறைவேற்றவில்லை. ஆகவே, இரண்டாவது சபைக்கான ஒரு புதிய நியாய விளக்கம் உள்ளது. பல நவீன சமஷ்டி அரசியலமைப்பியல் கல்விமான்கள் மத்தியில் பிராந்திய பிரதிநிதித்துவம் சமஷ்டியின் வாழ்வாதாரமான அம்சமென்று குறிப்பிட்டுள்ளனர். சமஷ்டியென்பது சுயாட்சியும், பகிர்வு ஆட்சியுமாயின், அதிகாரப்பகிர்வு வழங்கப்பட்ட அலகுகுள் மத்தியில் குரலெழுப்புவதற்கு வசதியளிக்கப்படுதல் பகிர்வு ஆட்சியை உறுதிப்படுத்தும் வழிமுறையமைப்பாகும்.

முதலாவதாக அதிகாரப் பகிர்வைப் பாதுகாக்கும், ஒரு நியாய விளக்கம் உள்ளது. ஒரு மத்திய அரசாங்கத்தின் நிறைவேற்றுத்துறை அல்லது சட்டவாக்கத்துறை அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்ட அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளை குடைகவிழ்க்கக்கூடிய தீர்மானங்கள், விதிமுறைகள் அல்லது சட்டங்களை வேண்டுமென்றோ, தற்செயலாகவோ எடுக்கக்கூடும். மத்திய அரசாங்கத்தின் அதிகாரிகளும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அதிகாரப்பகிர்வுக்குச் சாதகமான அணுகுமுறையில் தமது தீர்மானங்களை எடுப்பதில்லை. ஆகவே மத்திய அரசு பிராந்தியங்களின் சட்ட நிலைத்தகவுள்ள அதிகாரங்களை மீறும் வகையில் நடந்துகொள்ள முற்படும் வேளைகளில் கரிசனையை வெளிப்படுத்துவதற்கும், அபாய அறிவிப்புச் செய்வதற்கும் மத்தியில், பிராந்தியங்களின் மற்றும் மாகாணங்களின் தூதுவர்கள் அல்லது அதிகாரப்பகிர்வின் காவலர்கள் இருப்பதை உறுதிப்படுத்துவது முக்கியமானதாகும். இது சுயாட்சியைப் பெரிதும் முன்னேற்றும்.

இரண்டாவதாக, தேசிய ஐக்கியத்தைப் பாதுகாக்கும் ஒரு நியாய விளக்கம் உள்ளது. பிராந்தியக் கட்சிகளும், குழுக்களும் பிராந்திய சிந்தனை மற்றும் அடையாளம் என்பவற்றை மாத்திரம் பேணுதல்

போதாது. அவர்கள் தம்மை முழுமையின் ஒரு பகுதியாகவும் உணர்தல் வேண்டும் அவர்கள் பிராந்தியத்தினதும், முழுத்தேசத்தினதும் நலன் பிரதிநிதிகளாகச் செயலாற்ற வேண்டும். இது பொதுத்தன்மைக்கும், பிரத்தியேகத்தன்மைக்குமிடையில் சரியான சமநிலையை ஏற்படுத்தி பகிர்வு ஆட்சியை வலுப்படுத்தும், எல்ரீரீஈ உள்ளடங்கலான தமிழ் அரசியல் குழுக்கள் ஒரு புதிய அரசியலமைப்பின் பங்காளர்களாக, வடக்கு, கிழக்கு அரசியல் செயல்முறையில் பங்கேற்கும் அதேவேளையில் அவர்கள் தேசிய அரசியலில் பங்கேற்பதும், கொழும்பில் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருப்பதும், முழுத்தேசத்தினதும் நலன்பிரதிகளாகச் செயலாற்றுவதும் முக்கியமானதாகும்.


மத்திய அரசு மாகாணங்களின் அதிகாரங்கள் மீது மிகவும் இலகுவாக ஊடுருவல் நடத்தியமை அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் தோல்வியடைக் காரணமாக அமைந்தது. மாகாணங்களின் அதிகாரங்களைக் குடைகவிழ்க்கும் சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வேளைகளில் குறிப்பிட்ட சட்டம் 13வது திருத்தத்தின் கீழ் ஏற்புடையதா இல்லையாவென்று எந்தப் பாராளுமன்ற அங்கத்தவரும் வினாவெழுப்பியது கிடையாது. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச்சட்டம், தென் பிராந்திய அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம் போன்ற பல சட்டங்கள் மாகாணங்களின் அதிகாரங்களைக் குடை கவிழ்ப்பவையாகும். ஆயினும்


> “நீங்கள் கூறுவது போன்று அரசியலமைப்பு மாற்றமும் சமஷ்டி ஏற்பாடுகளும் இங்குள்ள நெருக்கடிக்கான அரசியல் தீர்வின் ஒரு முக்கிய பகுதியாகும்.”

எந்தப் பாராளுமன்ற உறுப்பினரும் எந்தவித ஆட்சேபனையையும் தெரிவிக்கவில்லை. மத்திய அரசுக்கும், பிராந்தியங்களுக்குமிடையிலான அதிகாரப் பகிர்வு பாதுகாப்பானதாகவும், பயனுறுதியுள்ளதாகவும் அமைய வேண்டுமெனில், மத்தியில் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் வழிமுறையமைப்புகள் இருக்க வேண்டியது அவசியமாகும். சட்டவாக்கத்தின் நீதிமுறை மீளாய்வு மற்றும் மத்தியில் பிராந்தியப் பிரதிநிதித்துவம் என்பவை இத்தகைய இரு பாதுகாவல் எற்பாடுகளாகும். தற்போதைய அரசியலமைப்பில் இவ்விரண்டு வாழ்வாதாரமான கட்டுப்படுத்தும் வழிமுறையமைப்புகளில் எதுவுமே இல்லை. இந்த நிலைமை மாறவேண்டும்.

**வெகுவிரைவில் இலங்கையில் அரசியல் தீர்வின் ஒரு பகுதியாக ஒரு புதிய சமகூஷ்டி அரசியலமைப்பொன்று ஏற்பட்டு, நாட்டில் சமாதானம் உருவாகுமென்று நம்புகிறீர்கள்?**

இத்திசையில் வெற்றிகரமாக முன்னேற முடியமென்று நான் நம்புகின்றேன். நீங்கள் கூறுவது போன்று அரசியலமைப்பு மாற்றமும் சமஷ்டி ஏற்பாடுகளும் இங்குள்ள நெருக்கடிக்கான அரசியல் தீர்வின் ஒரு முக்கிய பகுதியாகும். பல்வேறு மட்டங்களில், பல்வேறு குழுக்கள் எதிர்நோக்கும் ஏனைய பல சவால்களும் உள்ளன.





அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் முக்கியமான இரு பிரச்சினைகள் உள்ளன. முதலாவதாக அரசியலமைப்பாக்கச் செயல்முறையில் நாம் அதிகாரப் பகிர்வு மற்றும் சுயாட்சி என்பவற்றில் மாத்திரம் கவனம் செலுத்துவது போதாது. ஏனைய அரசியலமைப்பியல் அடிப்படை அம்சங்களையும் சரியாக வகுத்தமைத்துக் கொள்ள வேண்டும். அனைத்துச் சட்டங்களையும் விட மேலோங்கும் அரசியலமைப்பு, அனைத்துத் தரப்பினரும், ஜனசமூகங்களும் ஒட்டிநிற்கும் விழுமியங்களையும் கோட்பாடுகளையும் உள்ளடக்குவதாகவும் தனிநபர் மற்றும் கூட்டு மனித உரிமைகள் அனைத்தையும் பயனுறுதியுள்ள வகையில் பாதுகாப்பதாகவும் மற்றும் வகைப்பொறுப்பு, ஒளிவு மறைவின்மையை முன்னேற்றும் வழிமுறையமைப்புக்களை உள்ளடக்கியதாகவும் அமைதல் வேண்டும்.

1972 மற்றும் 1978 அரசியலமைப்புகளில் இந்த விடயப்பரப்புக்களில் பல சரியான முறையில் இடம்பெற்றிருக்கவில்லை. 2000ம் ஆண்டு அரசியலமைப்பு வரைபும் இத்தகைய ஒன்றேயாகும். அரசியலமைப்பை ஆக்கும் முக்கிய பணியை அரசியல்வாதிகளை மட்டும் நம்பி ஒப்படைக்க முடியாது. அரசாங்கம் மற்றும் எல்ரீரீஈ அமைப்பிடமும் இந்த முக்கியமான பொறுப்பை வழங்க முடியாது. அரசியலமைப்புக்கள் அரசியல் அதிகாரம் இல்லாதவர்களைப் பாதுகாக்க வேண்டும். அரசியலமைப்பை வரையுமாறு அதிகாரத்திலிருப்போரைக் கேட்பது கோழிக்கூடுகளை வடிவமைக்குமாறு நரிகளைக் கேட்கும் பேதமைக்கு ஒப்பானதாகும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்செல்கையில் பயனுறுதியுள்ள மனித உரிமைப் பாதுகாப்பு வழிமுறையமைப்புக்கள் இருக்க வேண்டியது மேலுமொரு கரிசனை விடயமாகும். சமாதான ஆதரவுக்குழு உட்பட்ட பல சிவில் சமூக அமைப்புக்கள் பேச்சுவார்த்தைகள் தொடரும் வேளையில் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அரசாங்கத்துக்கும் எல்ரீரீஈ அமைப்புக்குமிடையில் மனித உரிமைகள் புரிந்துணர்வு உடன்படிக்கை சர்வதேச மனித உரிமை அடிப்படை நியமங்களை அங்கீகரிப்பதோடு, வினைத்திறனுள்ள கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல் வழிமுறையமைப்புகளுக்கு வகை செய்தல் வேண்டும். பிரத்தியேகமாக கிழக்கு மாகாணத்தில் இடம்பெறுவதாகக் கூறப்படும் சிறுவர்களைக் கட்டாயமாகப் படைகளில் சேர்த்தல், ஆட்கடத்தல், வழிப்பறி, மிரட்டல் மற்றும் பயமுறுத்தல் என்பவை காரணமாக இது ஒரு வாழ்வாதாரமான, முன்னுரிமைப் பிரச்சினையாக மாறியுள்ளது. இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்படாவிடின் சமாதானச் செயல்முறையின் நம்பகத்தகவும், நிறைவேற்றுத்தன்மையும் பெருமளவுக்குப் பாரதூரமாகப் பாதிப்புறும் அபாயம் உள்ளது.

# சமஷ்டிமுறை பற்றிய அடிப்படை அறிமுகம்

எரன்தி பிரேமரட்ண



இன்று இலங்கையர்கள் மத்தியில் பரவலாக பேசப்படும் சமஷ்டி முறை குறித்த அடிப்படையான சில அம்சங்களை ஆராய்வது இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

உலகின் ஏழு கண்டங்களிலும் இருபத்தைந்து சமஷ்டி அமைப்பு முறை உள்ள நாடுகள் காணப்-படுகின்றன.

அவுஸ்திரேலியா, ஜேர்மனி, சுவிட்ஸர்லாந்து, இந்தியா, ஸ்பெயின், பிரேஸில், ஆர்ஜன்டீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஐக்கிய அமெரிக்கா, கனடா, மலேசியா, ஒஸ்ரியா, பாகிஸ்தான் என்பன அவற்றுள் சிலவாகும்.

இந்த நாடுகளின் வரிசையை உற்றுநோக்கும் போது, உலகின் மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகள் பல சமஷ்டி அமைப்பு முறையைக் கொண்டுள்ளதை அவதானிக்கலாம். இந்தியா உள்ளிட்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் சிலதும் இதில் அடங்குகின்றன.

சமஷ்டி அமைப்புள்ள நாடொன்று பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டிருக்கும். (பெரும்பாலும் பூகோள அம்சங்களை அடிப்படையாகக் கொண்டே பிராந்தியங்கள் பிரிக்கப்படுகின்றன.) ஒவ்வொரு பிராந்தியத்துக்குள்ளும் அந்தந்தப் பிராந்தியங்களின் நிர்வாகத்தை நடாத்தும் அரசுகள் காணப்படும். இது பிராந்திய அரசாங்கம் என அழைக்கப்படும். இந்தப் பிராந்திய அரசுகளுக்கு மேலதிகமாக நாட்டில் மத்திய அரசொன்றும் இருக்கும்.

ஐக்கிய அமெரிக்கா ஐம்பத்தெட்டு பிரிவுகளைக் கொண்டது. (ஐம்பது பிராந்தியங்களும் எட்டு வேறு பிரிவுகளும்) கனடா பதின்மூன்று

**அதிகாரப் பகிர்வின் போது சகல பிராந்தியங்களுக்கும் சம அளவிலான அதிகாரப்பகிர்வு ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான சமஷ்டி முறையாகும். இதற்கு மாறாக பிராந்தியங்கள் மத்தியில் வெவ்வேறு அளவிலான அதிகாரப்பகிர்வு முறையும் உண்டு. இது மரபு ரீதியற்ற சமஷ்டி என அழைக்கப்படுகிறது.**

பிரிவுகளையும், இந்தியா முப்பத்தைந்து பிரிவுகளையும் ஜேர்மனி பதினாறு பிரிவுகளையும் கொண்டுள்ளன.

நிறைவேற்றதிகாரம், பாராளுமன்றம், நீதித்துறை என்பவற்றிற்கு நாட்டின் அரசியலமைப்பு ரீதியாக வகுக்கப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கும்.

மத்திய அரசின் அதிகாரம் நாட்டின் அனைத்துக்குடி மக்களுக்கும் பொதுவான விதத்தில் பிரயோகிக்கப்படும். மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுகளுக்குமிடையில் தெளிவான அதிகாரப் பகிர்வு காணப்படும். வெளிநாட்டு விவகாரம், தேசிய பாதுகாப்பு போன்ற அம்சங்கள் மத்திய அரசின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் வருவதுடன், பிராந்தியத்துக்குள் கல்வி, சுகாதாரம், நலன்புரித் திட்டங்கள் தொடர்பான முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தைப் பிராந்திய அரசுகள் கொண்டிருக்கும்.

கனடாவின் மத்திய அரசிற்கு பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியிலான வர்த்தகம், ஆதிவாசிகள் தொடர்பான விடயங்கள், சர்வதேச ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுதல், நிதி மற்றும் வங்கிச் செயற்பாடுகள், இடைக்கால நிர்வாகப் போக்குவரத்து போன்ற துறைகளில் பூரண அதிகாரம் இருக்கிறது. அதே போல் கனடாவின் ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் வரி, பொதுச் சொத்துக்கள், தனியார் சொத்துக்கள், சுகாதாரம், நலன்புரி விடயங்களில் முழு அளவிலான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் மத்திய அரசுக்கு தேசிய பாதுகாப்பு, அணுசக்தி, பிரஜா உரிமை, வருமான வரி போன்ற துறைகளில் பூரண அதிகாரம் காணப்படுவதோடு, பொலிஸ்துறை வரி, விவசாயம், சுகாதாரம் போன்றவற்றின் அதிகாரங்களை பிராந்திய அரசுகள் கொண்டிருக்கின்றன. அதேவேளை குற்றவியல் தடுப்புச் சட்டம், கல்வி, மின்சாரம், தொழிற்சங்க செயற்பாடுகள் போன்ற சில அம்சங்களில் மத்திய அரசும் மாநில அரசும் ஒன்றிணைந்த அதிகார வரையறைகளைக் கொண்டுள்ளன.

எந்தவொரு சமஷ்டி முறையின் கீழும் ஒரு சில விடயங்கள் தவிர்ந்த ஏனைய துறைகளில் தீர்மானங்களை மேற்கொள்ளும் அதிகாரம் பிராந்திய அரசிற்கு வழங்கப்படும்.

மத்திய அரசின் அதிகாரம் குறித்தும் பிராந்திய அரசின் அதிகாரம் குறித்தும் இவ்விரண்டு தரப்பினரும் கலந்தாலோசித்து வரையறை செய்து கொள்ள முடியும். ஆரம்பத்தில் கனடாவின் மத்திய அரசு தேவையான போதெல்லாம் பிராந்திய அரசுகளுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்கக்கூடியதாக இருந்தது. மேலும் தேவையேற்படின் சில சந்தர்ப்பங்களில் பிராந்திய அரசுகளின் அதிகாரங்களை மத்திய அரசு தன்வசமாக்கிக் கொள்ளவும் முடியும்.

அதிகாரப் பகிர்வின் போது சகல பிராந்தியங்களுக்கும் சம அளவிலான அதிகாரப்பகிர்வு ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான சமஷ்டி முறையாகும். இதற்கு மாறாக பிராந்தியங்கள் மத்தியில் வெவ்வேறு அளவிலான அதிகாரப்பகிர்வு முறையும் உண்டு. இது மரபு ரீதியற்ற சமஷ்டி என அழைக்கப்படுகிறது.

முழு நாட்டுக்கும் பொதுவான தீர்மானங்கள் மத்திய அரசினாலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

இதன்போது பிராந்திய அரசுகளின் கருத்தை மத்திய அரசுக்கு தெரியப்படுத்தவும், மத்திய அரசின் ஆலோசனைகள், தீர்மானங்களுக்கு உடன்பாடு, ஆட்சேபம் தெரிவிக்கவும், மத்திய அரசில் பிராந்திய அரசு-களின் பிரதிநிதித்துவம் அவசியமாகும்.

இந்த செயன்முறையை இலகுபடுத்தும் பொருட்டு சமஷ்டி நாடொன்றின் பாராளுமன்ற அமைப்பு இரண்டு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கும். இதில் ஒரு பிரிவு பிராந்திய அரசுகளின் பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும். ஐக்கிய அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் செனட் சபைகளையும் இந்தியாவின் ராஜ்யசபை, ஜேர்மனியின் சமஷ்டி கவுன்ஸில் என்பவற்றை இதற்கு உதாரணங்களாகக் கூற முடியும். மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுகளுக்கும் இடையில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விதத்தை நாட்டின் அரசியலமைப்பு குறிப்பிடும்.

அமெரிக்கா மற்றும் கனடா அரசியலமைப்புகளில் மத்திய அரசின் அதிகாரங்கள் மாத்திரம் குறிப்பிடப்பட்டு ஏனைய அதிகாரங்கள் பிராந்திய அரசுகளுக்கு உரித்தாகும் எனக் கூறப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்பில் மத்திய, பிராந்திய அரசுகளுக்கான அதிகாரங்கள் தனித்தனியாக குறிப்பிடப்பட்டுள்ளதோடு இரண்டுக்கும் பொதுவான அதி-காரங்கள் தொடர்பிலும் வரையறை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு துறையிலும் மத்திய, பிராந்திய அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை தெளிவாக எழுதிய அரசியலமைப்பு சாசனம் ஒன்றின் மூலம் அதிகாரம் தொடர்பான பிரச்சினைகள் எழுவதைத் தவிர்க்க முடியும். எழுதி வைத்தால் மட்டும் போதாது. அவ்வரசியலமைப்பு சாசனம் சகலராலும் அதியுயர் கௌரவத்தைக் கொண்டதாகக் கருதப்பட வேண்டும். அத்துடன் இத்தகைய அரசியலமைப்பில் குறிப்பிடத்தக்க திருத்தங்களை மேற்கொள்ளும் போது மத்திய, பிராந்திய அரசுகளின் ஆலோச-னைகள் பெறப்பட வேண்டும்.

சமஷ்டி அமைப்பு குறித்து ஆராயும் போது அத்தகைய அமைப்பொன்றின் தேவைகள் தொடர்பாகவும் கருத்தில் கொள்வது அவசியமாகும். சிறிய நாடுகள் பல ஒன்றிணைந்து ஒரு சமஷ்டி நாட்டை உருவாக்க முடியும். அன்றேல் ஒற்றையாட்சி உள்ள ஒரு தேசம் அதிகாரங்களைப் பிராந்தியங்களுக்கு பகிர்வதன் மூலம் சமஷ்டி அமைப்பொன்றை உருவாக்கிக்கொள்ள முடியும்.

அந்நிய சக்திகளிடமிருந்து தங்களது சுயாதிபத்தியத்திற்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலைத் தவிர்க்கும் பொருட்டு சிறிய நாடுகள் ஒன்றிணைந்து சமஷ்டி அமைப்பை உருவாக்கலாம். கனடா இவ்வாறு தான் உருவானது. 1867ம் ஆண்டு பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கீழிருந்த மூன்று நாடுகள் தங்களுக்கு சமீபமாக இருந்த, சக்தி வாய்ந்த நாடாக உருவாகி வந்த அமெரிக்காவுடன் தம்மை இணைத்துக் கொண்டன. பின்னர் இதற்குள் இன்னும் சில சிறிய நாடுகள் உள்வாங்கப்பட்டு படிப்படியாக தற்போதைய கனடா உருவானது. சுவிட்ஸர்லாந்து நாடும் தனது பாதுகாப்புக் கருதி

> ***‘ ஒவ்வொரு துறையிலும் மத்திய, பிராந்திய அரசுகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை தெளிவாக எழுதிய அரசியலமைப்பு சாசனம் ஒன்றின் மூலம் அதிகாரம் தொடர்பான பிரச்சினைகள் எழுவதைத் தவிர்க்க முடியும். எழுதி வைத்தால் மட்டும் போதாது. அவ்வரசியலமைப்பு சாசனம் சகலராலும் அதியுயர் கௌரவத்தைக் கொண்டதாகக் கருதப்பட வேண்டும். ’***

ஒன்றிணைந்த சிறிய நாடுகளின் மூலமே தோற்றம் பெற்றது.

பொருளாதாரத் தேவைகளின் அடிப்படையிலும் சிறிய நாடுகள் ஒன்று சேர்நது சமஷ்டி அமைப்பொன்றை உருவாக்கலாம். இதன் மூலம் சிறிய நாடுகள் தங்களுக்கிடையே வர்த்தகப் போட்டியில் ஈடுபடுவது தவிர்க்கப்பட்டு பாரிய சந்தை ஒன்று உருவாகும். ஐக்கிய அமெரிக்கா சமஷ்டி நாடாக உருவாவதற்கு இத்தகைய பொருளாதார நோக்கமும் ஒரு காரணமாகக் கருதப்படுகிறது.

இதே போல் கீழ்க் குறிப்பிடப்படும் அடிப்படைகளுக்கு அமைய ஒற்றை அரசொன்று சமஷ்டி அரசாக மாற்றமடைய முடியும்.

பல மொழி பேசும், பல மதங்களைப் பின்பற்றும் மக்கள் வாழும் நாடுகளில் அனைத்து மக்கள் சமூகத்தினருக்கும் கௌரவமாக வாழும் சந்தர்ப்பம் கிடைக்கும். அதாவது, சமஷ்டி அமைப்பின் கீழ் ஒரு நாட்டில் சிறுபான்மை இன மக்கள் குறிப்பிட்ட ஒரு பகுதியில் அதிகமாக வாழும் பட்சத்தில் தங்களின் தேவைக்கு ஏற்றவாறு சட்ட ஒழுங்குகளை வகுத்துக் கொள்ள முடியும்.

உதாரணமாக கனடாவை எடுத்துக் கொண்டால், அங்குள்ள மக்களில் அறுபது சதவ்விகிதமானவர்கள் பிரிட்டிஷ் பாரம்பரியத்தையுடையவர்கள். 24 வீதமானோர் பிரெஞ்சு வழிமுறையினர். இவர்களுக்கு மத்தியில் காணப்படும் மொழி, கலாசார வேறுபாடுகளைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு சமூகத்திற்கும் ஏற்றவிதத்தில் சட்டம் இயற்ற சமஷ்டி முறையில் பிராந்திய அரசுகளுக்கு வழியுள்ளது.

இதன்மூலம் முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டெழும் சிக்கல்களை தவிர்க்க முடியும்.

ஒரு நாடு பாரிய பரப்பளவைக் கொண்டதாக அமைந்திருக்கும் போது (மாநிலங்களாக) பகுதிகளாகப் பகுத்து நிர்வாகம்

> **“ சமஷ்டி அமைப்பின் கீழ் ஒரு நாட்டில் சிறுபான்மை இன மக்கள் குறிப்பிட்ட ஒரு பகுதியில் அதிகமாக வாழும் பட்சத்தில் தங்களின் தேவைக்கு ஏற்றவாறு சட்ட ஒழுங்குகளை வகுத்துக் கொள்ள முடியும். ”**

செய்வது சுலபமானது. மிகப்பெரிய நாடான இந்தியா அதிகாரப் பகிர்வின் அவசியம் கருதி 1935ம் ஆண்டு சமஷ்டி அமைப்புக்கு மாறியது. இந்தியா அடிப்படையில் சமஷ்டி அமைப்பு முறையாக உருவாக்கப்பட்டிருந்தாலும் அரசியலமைப்பில் இது குறித்து எழுதப்படவில்லை. இந்திய அரசியலமைப்பு பிராந்தியங்களின் ஒன்றியம் என்றே அந்நாட்டை அழைக்கின்றது. அவசியமானால் இந்தியா சமஷ்டி முறையில் இருந்து பின்வாங்கி ஒற்றையாட்சிக்குச் செல்ல முடியும். அவ்வாறான வரலாற்று நிகழ்வுகள் இருக்கின்றன. நாட்டின் நிர்வாகத்தைப் பகுதி பகுதியாக பிரித்து செயற்படுத்தும் போது அரசாங்கம் மக்களுக்கு மிகவும் சமீபமாகிறது என்பதும் உணரப்பட வேண்டும்.

**இந்தக் கட்டுரையின் உள்ளடக்கத்தை சாராம்சப்படுத்தினால் கீழ்வரும் விடயங்கள் தெளிவாகும்.**

1. சமஷ்டி முறையென்பது பிராந்திய அரசு, மத்திய அரசு என இரண்டு பீடங்களைக் கொண்டது.
2. இந்த அதிகார பீடங்களிடையே தெளிவான அதிகாரப்பகிர்வு காணப்படும்.
3. மத்திய அரசில் பிராந்தியங்களின் பிரதிநிதித்துவம் காணப்படும்.
4. அதியுயர் கௌரவத்துடன் கூடிய எழுதப்பட்ட அரசியலமைப்பொன்று இருக்கும்.

**சமஷ்டி அமைப்புள்ள நாடொன்று கீழ்வரும் தேவைகளின் அடிப்படையில் உருவாகலாம்.**

1. சிறிய நாடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக.
2. சிறிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்காக பாரிய நாடுகளின் நிர்வாகத்தை வசதியாக்கும் பொருட்டு
3. பல்லின நாடொன்றில் முரண்பட்ட சலுகைகளால் ஏற்படும் பிணக்குகளை தீர்ப்பதற்காக

# சமஷ்டிக் கொள்கை என்றால் என்ன?

அரச அதிகாரங்களும், கடமைகளும் சமஷ்டி அரசிற்கும் (மத்திய அரசு) மாநில அரசிற்கும் இடையில் பகிரப்படும் கொள்கையை சமஷ்டிக் கொள்கை எனக் குறிப்பிடலாம்

சமஷ்டி அரசு வழமையாக முழு நாட்டிற்கும் உரிய விடயங்களை (வெளிவிவகார கொள்கை மற்றும் பாதுகாப்பு) கையாளும் அதேவேளை மாநில அரசு உள்ளூருடன் தொடர்புபட்ட விடயங்களை, பொலிஸ், கல்வி, வீதி போன்ற விடயங்களில் அக்கறை செலுத்தும்.

சமஷ்டி அமைப்புமுறை காணப்படும் நாடுகளில் அதிகாரங்களைப் பகிர்வதற்கு பல வழிமுறைகள் காணப்படுகின்றன.

மேலும் இவை பகிரப்பட்ட அல்லது ஒத்திசைவான நியாயாதிக்க வழிமுறைகளைக் கொண்டிருக்கும்.

**சமஷ்டிக் கொள்கையை எப்படி அடைவது?**
மத்திய, மாநில அரசுகளின் கடைமைகளை வரையறுக்கும் சமஷ்டி அரசியலமைப்பு முறை மூலம் சமஷ்டிக் கொள்கையை அடையலாம்.

மலேசிய அரசியலமைப்பில் அரசின் கடமைகளும் அதிகாரங்களும் சமஷ்டிப்பட்டியலிலும் மாநிலப் பட்டியலிலும் இரு அரசிற்கும் பொதுவான பட்டியலிலும் அடங்கியுள்ளது.

**சமஷ்டிமுறை எவ்வாறு உருவாகியுள்ளது?**
வேறு வேறு அரசியல் சமூகங்களை இணைப்பதற்கும் தனியாக அடைய முடியாத இலக்குகளைக் கூட்டாக அடையச் செய்வதற்கும் அதேவேளை, இரு சமூகங்களும் தமது தனித்துவங்களை கைவிடாத நிலையை உருவாக்கவும் சமஷ்டி அமைப்பு முறை உருவானது.

**சமஷ்டி அமைப்பை ஒற்றையாட்சி முறையிலிருந்து வேறுபடுத்துவது என்ன?**
சமஷ்டி அமைப்பு முறையில் மத்திய அரசு சகல அதிகாரங்களையும் தனதாக்கிக்கொள்வது தடுக்கப்படுகின்றது. தேவையான அதிகாரங்கள் மாத்திரம் மத்திய அரசிற்கு அளிக்கப்படுகின்றது.

சமஷ்டி முறையில் மாநில அரசாங்கங்கள் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு ஏற்ப உள்ளூர், பிராந்திய விடயங்களை கையாளலாம்.

ஒற்றையாட்சி முறையில் சகல முடிவுகளும் மத்திய அரசிடமிருந்தே வருகின்றன.

**சமஷ்டிமுறை பொதுவாக எப்படி இருக்கும்?**
சமஷ்டி அமைப்பில் தேசிய அரசாங்கங்களும் ஏனைய தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கங்களையும் கொண்டிருக்கும். ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு உள்ளூர் அரசாங்கம் ஒன்று காணப்படும்.

சமஷ்டி அரசிற்கும் மாநில அரசிற்கும் அரசியல் ரீதியாக வரையறுக்கப்பட்ட கடப்பாடுகள் உள்ளன. மெக்ஸிக்கோ, பிரேஸில் போன்ற நாடுகளில் மாநகரசபை வரை இது விரிவடையும்.

**சமஷ்டி அமைப்பிற்கும் அதிகாரப்பகிர்விற்கும் என்ன வித்தியாசம்?**
அதிகாரப்பகிர்வு முறையின்படி அதிகாரங்களைப் பகிர்வதற்காக ஏற்படுத்தப்படும் அமைப்புக்கள் அரசியல் யாப்பு முறை மூலம் உறுதிப்படுத்தப்படுவதில்லை.

> வேறு வேறு அரசியல் சமூகங்களை இணைப்பதற்கும் தனியாக அடைய முடியாத இலக்குகளைக் கூட்டாக அடையச் செய்வதற்கும் அதேவேளை, இரு சமூகங்களும் தமது தனித்துவங்களை கைவிடாத நிலையை உருவாக்கவும் சமஷ்டி அமைப்பு முறை உருவானது.

மாறாக மத்திய அரசிடமிருந்து குறிப்பிட்ட சில அதிகாரங்கள் பிராந்திய அரசுகளிடம் கையளிக்கப்படும். தேசிய அரசாங்கம் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அதேவேளை, அந்த அதிகாரத்தை மீளப்பெறுவதற்கான அதிகாரத்தையும் கொண்டிருக்கும்.

அநேக நாடுகளில் அதிகாரங்கள் அரசியல் யாப்பு முறை மூலம் உறுதிப்படுத்தப்படாத நிலையே காணப்படுகின்றது.

மாறாகப் பாராளுமன்றச் சட்டங்கள் மூலமே இவை பகிரப்படுகின்றன.

சிறுபான்மை இனங்களின் அபிலாஷையைக் கருத்தில் கொண்டு அதிகாரங்களைப் பகிர்வதற்கு முன் வந்த நாடுகளில் பிரிட்டனும் ஒன்று.

1998ல் ஸ்கொட்லாந்து சட்டத்தின் மூலம் பிரிட்டிஷ் பாராளுமன்றம் ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்தை 300 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் உருவாக்கியது.

இதே போன்று வட அயர்லாந்திற்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

**சமஷ்டியின் முறைகள் எவை?**
சமஷ்டி அமைப்பு முறையை பல வகையாகப் பிரிக்கலாம்.

**1. 'Born' Federataion**
நாட்டின் அரசியல், நிதி கட்டமைப்பின் உருவாக்கத்தில் முக்கிய பங்கை ஆற்றிய சமஷ்டி அமைப்பு முறை (கனடா, அமெரிக்கா, இந்தியா)

**2. சமஷ்டி அமைப்பு முறைக்கு மாறிய பல்வேறு நாடுகள்.**
பல்வேறு குழுக்களிடையே ஐக்கியத்தைப் பேணவும் நாட்டின் ஐக்கியத்தைப் பேணவும் பல நாடுகள் சமஷ்டி முறைக்கு மாறின. (தென் ஆபிரிக்கா, பெல்ஜியம்)

**3. சமஷ்டிமுறை திணிக்கப்பட்ட நாடுகள்**
பலவீனமான மத்திய அரசு காரணமாக நாடு பிளவுபடும் நிலை ஏற்படும் போது சமஷ்டி முறையை சில நாடுகள் பின்பற்றத் தொடங்கின. (பொஸ்னியா)

## சமஷ்டிமுறை சில கேள்விகளும் பதில்களும்

### நியாயாதிக்கம், கடமைகள், அதிகாரங்கள்.

**சமஷ்டி அரசு விசேடமாக என்ன அதிகாரங்களைக் கொண்டிருக்கலாம்?**
சமஷ்டி அரசு சில விடயங்கள் குறித்து விசேட அதிகாரங்களையும் கடமைகளையும் கொண்டிருக்கும் அவையாவன

1) தேசிய பாதுகாப்பு
2) வெளிவிவகாரம்
3) நிதி விவகாரம்
4) வர்த்தகம்
5) குடிவரவு
6) சிவில் உரிமை, அரசியல் உரிமை, மனித உரிமை
7) குடிவரவு, குடியகல்வு

**சமஷ்டி அமைப்பிற்கும் மாநில அரசிற்கும் உள்ள விசேட அதிகாரங்கள் என்ன?**

1) மாநில, உள்ளூர் தேர்தல்
2) பிராந்திய நீதிமன்றம்
3) பொதுமக்கள் சேவையை நிர்வகித்தல்
4) மாநில அரசின் சமூக-பொருளாதார திட்டமிடல்
5) மாநில நிதி
6) உள்ளூர் அரசாங்கத்திற்கு நிதி வழங்குதல்
7) . பொலிஸ், பொதுப்பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு
8) உள்ளூர் உட்கட்டமைப்பு

**மத்திய, மாநில அரசுகளுக்கு பொதுவாக இருக்கக் கூடிய விடயங்கள் எவை?**

1) சுகாதாரம்
2) கல்வி
3) சமூக நலன்புரி
4) கலாசார அபிவிருத்தி
5) விளையாட்டு அபிவிருத்தி
6) சூழல் பாதுகாப்பு
7) சக்தி
8) உல்லாசப் பயணம்
9) வீதி, பெருந்தெருக்கள்

**சமஷ்டி அமைப்பு முறையில் மோதல்கள், சந்தேகங்கள் எழும்பட்சத்தில் எவ்வாறு தீர்வு காணலாம்?**
சமஷ்டி அரசிற்கும் மாநில அரசிற்கும் இடையில் மோதல்கள் எழும்போது அதற்கு தீர்வு காணும் அதிகாரத்துடன் கூடிய அரசியலமைப்பு நீதிமன்றங்களை ஏற்படுத்தலாம்.

அமெரிக்காவிலும் கனடாவிலும் உயர் நீதிமன்றம் இந்தப் பணியை புரிகின்றது.

### சமஷ்டிமுறை குறித்த யதார்த்த பூர்வமான விடயங்கள்

**சமஷ்டிமுறை பெரிய நாடுகளுக்கு மட்டும் பொருந்துமா? இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்குப் பொருந்தாதா?**
சமஷ்டிமுறை என்பது சிறிய, பெரிய நாடுகள் அனைத்திற்கும் பொருந்தக்கூடியது. நாட்டின்

அளவை விட அரசியல் நோக்கங்களே முக்கியம்.

**சமஷ்டி முறையை ஏற்றுக் கொண்டுள்ள சிறிய நாடுகள் எவை? பெரிய நாடுகள் எவை?**

சமஷ்டி முறையை ஏற்றுக்கொண்ட பெரிய நாடுகள் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா. சிறிய நாடுகள் பெல்ஜியம், மலேசியா.

**ஜனாதிபதி முறை, பாராளுமன்ற முறை உள்ள நாடுகளில் சமஷ்டிமுறை சாத்தியமா?**

ஜனாதிபதி முறை, பாராளுமன்ற முறை உள்ள நாடுகளில் சமஷ்டிமுறை சாத்தியமே

ஜனாதிபதி முறை உள்ள நாடுகளில் சமஷ்டிமுறை காணப்படுவதற்கு உதாரணமாக அமெரிக்கா, மெக்ஸிக்கோ போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம்.

பாராளுமன்ற முறையுடன் கூடிய சமஷ்டி முறையைக் கொண்டுள்ள நாடுகள் இந்தியா, மலேசியா.

**ஒற்றையாட்சி முறையை விட சமஷ்டி ஆட்சி செலவு கூடியதா?**

நாட்டை நிர்வகிப்பது அந்த நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைப் பொறுத்த விடயம்.

சமஷ்டி அமைப்பு முறை உள்ள நாடுகளை விட இல்லாத நாடுகளில் நிர்வகிப்பதற்கான செலவு அதிகமாகக் காணப்படுகின்றது.

**இலங்கைக்கு எந்தச் சமஷ்டி முறை பொருத்தமானது?**

இலங்கைக்கு எந்த சமஷ்டி முறை பொருத்தமானது என்பதைப் பேச்சுவார்த்தைகள் மூலமும், விவாதங்கள் மூலமும் தீர்மானிக்கலாம். இலங்கை தனக்குப் பொருத்தமான முறையை வேறு பல சமஷ்டி அமைப்பு மாதிரிகளை அடிப்படையாக வைத்துத் தீர்மானிக்கலாம்.

**சமஷ்டி முறை சகல பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையுமா?**

சமஷ்டி முறை சகல பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையாது. எனினும் இலங்கையின் இப்போதைய நிலையில் மக்கள் தங்கள் வாழ்க்கையையும் பாதுகாப்பையும் தாங்களே தீர்மானிப்பதற்கு இது உதவும்.

**சமஷ்டி முறைக்கு மாறுவதை எப்படி மேற்கொள்ளலாம்?**

அரசியலமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வருவதன் மூலம் ஒற்றையாட்சியிலிருந்து சமஷ்டிக்கு மாறலாம்.

சமீபகால சர்வதேச வரலாறுகள் பல பிரிவினைகளைச் சந்தித்துள்ளன. ஒரு கட்சி சர்வாதிகாரம் காணப்பட்ட பல நாடுகளிலேயே பிரிவினை இடம் பெற்றுள்ளது.

முக்கியமாக சிறுபான்மையினத்தினர் ஒடுக்கப்பட்ட நாடுகளிலேயே இது நிகழ்ந்துள்ளது. சமஷ்டி முறையைப் பொறுத்த வரை அதற்கு ஜனநாயக அமைப்புக்கள் அவசியம். இதன் மூலம் தேசிய இனங்கள் ஓரளவு உள்ளக சுயாட்சியுடன் விளங்கலாம். இதன் மூலம் பிரிவினையைத் தவிர்க்கலாம்.

1970களில் பெல்ஜியம் தனது சிறுபான்மை இனங்களின் அபிலாஷைகளைக் கருத்தில் கொண்டு புதிய அரசியலமைப்பு மூலம் சமஷ்டி முறையை ஏற்படுத்தியது.

பெல்ஜியத்தில் மூன்று வகையான அரசுகள் காணப்படுகின்றன.

சமஷ்டி, பிராந்திய அரசாங்கங்கள் நிலம் சம்பந்தமான விடயங்களைக் கையாள்வதற்கான அதிகாரங்களைக் கொண்டுள்ளன.


கனடாவில் ஏனைய ஒன்பது பிராந்திய அரசுகள் போல கியூபெக்கிற்கும் மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கல்வி போன்ற விடயங்களிலும் பிரெஞ் மொழியை கலாசாரத்தைப் பேணும் விடயத்திலும் கியூபெக்கிற்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனினும் கியூபெக்கில் தொடர்ந்தும் பிரிவினைவாத இயக்கம் காணப்பட்டது. இந்த அமைப்பு சமஷ்டி முறைக்குள்ளேயே தனது கோரிக்கையை முன் வைத்தது.

கனடாவின் சமஷ்டி முறை சகல வகையான ஜனநாயகக் கருத்துகளுக்கும் மதிப்பளிக்கின்றது (பிரிவினை உட்பட).

பிரிவினைக் கோரிக்கையை முன்னெடுப்பவர்கள் அதனை ஜனநாயக ரீதியில் முன்வைக்கலாம்.



# ஜனநாயகப்படுத்தலும் முரண்பாட்டுத் தீர்வும் : இலங்கையில் சமஷ்டி ஆட்சிமுறையை ஏற்படுத்துவதற்கான நியாய விளக்கம்

அசங்க வெலிக்கல

**இலங்கையில் சமஷ்டி எண்ணக்கருவின் வரலாறு**

இலங்கை அரசின் அரசியல் உறவுகளை ஒழுங்கமைப்பதில் ஒற்றையாட்சிக்கான சமஷ்டி மாற்றுக்கருத்து பொது வாழ்வில் ஒன்றும் புதியதல்ல. பிரசித்தி பெற்ற சிவில் சேவையாளரும் நூலாசிரியருமான லெனார்ட் வூல்ப் கடந்த நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் இலங்கையின் அரசியல் முறைமையை ஒழுங்கமைப்பதற்கு சமஷ்டி மேலும் சிறந்த ஒரு வழியாகுமென்பதை முதலில் தெரிவித்தார். பின்னர் 1926ம் ஆண்டு பண்டாரநாயக்க யாழ்ப்பாணத்தில் தாம் ஆற்றிய ஒரு தொடரான பொது உரைகளை சிலோன் மோர்னிங் லீடர் பத்திரிகையில் பிரசுரித்த போது சமஷ்டியை வலியுறுத்தும் ஒருவராக அவர் விளங்கினார். சமஷ்டியை "இலங்கையின் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உறவுப் பிரச்சினைகளுக்கான ஒரு தீர்வாக" வர்ணித்த அவர் தனிநபர்வாதத்திற்கும் தேசிய வாதத்திற்குமிடையில் "நவீன ஜனநாயக அரசாங்கம்" எதிர்நோக்கும் பதற்ற நிலைகளுக்கு பரிகாரமாகவும் அதை வலியுறுத்தினார். "துண்டு துண்டாக உடைக்கப்படும் அரசியல் அதிகாரம்" மற்றும் சுதந்திரம் சம்பந்தமான தோமஸ் ஹொப்சின் சொற்பிரயோகத்தை மேற்கோள் காட்டிய அவர் தேசிய பெரும்பான்மை இனம் தனிநபர் கட்டின்மை மற்றும் சுதந்திரத்தின் மீது செலுத்திய தாக்கம் குறித்துப் பெரும் கரிசனையை வெளிப்படுத்தினார். இலங்கை போன்ற ஒரு சிறிய சுதந்திர அரசின் பாதுகாப்புப் பிரச்சினைகளைக் கையாளுவதற்கு இந்தியாவுடன் சமஷ்டி முறையில் இணைய வேண்டுமென்றும் அவர் வாதிட்டார்.

1929-30களில் கண்டியர்கள் மேலும் செல்வாக்குள்ள கீழ்நாட்டுச் சிங்களவர்களுக்கெதிராகத் தமது கூட்டுத்தனித்துவத்தை பாதுகாப்பதற்கான ஒரே மார்க்கம் சமஷ்டி அரசியலமைப்பே என்று வாதிட்டு டொனமூர் அரசியல் ஆணைக்குழுவிற்குத் தமது கருத்தை எடுத்துக் கூறினர். தாம் ஒரு தனித்துவமான தேசமென்று உணர்ந்த கண்டியர்கள் பொருளாதார சக்தி மற்றும் எண்ணிக்கை காரணமாக ஒற்றையாட்சி அமைப்பில் பெரும்பான்மையினராகிய கீழ்நாட்டுச் சிங்களவர்கள் தம்மீது ஆதிக்கம் செலுத்துவார்களென்று

பீதியுற்றனர். அவர்கள் ஐக்கிய இலங்கையில் தனித்துவமான தேசிய இனங்கள் அரசியலமைப்பு ரீதியில் பிரதிநிதித்துவம் பெறக்கூடிய ஓர் ஏற்பாட்டை விரும்பினர்.



பட்டதும் நாம் இன்றுள்ள நிலைக்கு வழி சமைத்தன. இன்று சமூகம் ஆழமாகப் பிளவுற்றும் அரசு தமிழர்களைப் பொறுத்த வரையில் சட்ட நிலைத் தகவற்றும் இருபது வருடகாலப் பயங்கர யுத்தமொன்று சிறிது ஓய்வுற்ற நிலையும் காணப்படுகின்றன. சுதந்திரத்திற்குப் பிந்திய காலகட்டம் முழுவதையும் அனைவரையும் உள்ளடக்கும் இலங்கையரென்னும் அரசியல் அடையாளத்தையும், சமாதானத்தில் சந்துஷ்டியையும் கட்டியெழுப்புவதில் அர்த்தமுள்ள வகையில் செலவிட்டிருக்கலாம்.

இடதுசாரி அரசியல்வாதிகளும் சமஷ்டியின் பெறுமதியை உணர்ந்திருந்தார்கள். சமஷ்டி வடிவத்திலான பொறுப்பு வாய்ந்த அரசாங்கமொன்று அவசியமென்று தெரிவித்து திரு. பீட்டர் கெனமன் மற்றும் திரு. வைத்தியலிங்கம் என்போர் சோல்புரி ஆணைக்குழுவிற்கு மகஜர் சமர்ப்பித்தனர். புதிய சமசமாஜக்கட்சியினரும் இலங்கைத் தமிழர்களின் ஆட்புல ரீதியான தேச அந்தஸ்தை அங்கீகரிக்க வேண்டுமென்று தொடர்ச்சியாக வாதித்து வந்துள்ளனர்.

ஆயினும், தவறானதும் வலுவாக நிலைபேறாக்கப்பட்டதுமான சிங்கள அரசியல் சலுகை பெற்ற வர்க்கத்தின் நம்பிக்கை ஐக்கிய இலங்கை ஒற்றையாட்சியாக இருக்குமென்றும் அமைந்திருந்தது. இது ஆரம்பகால சமஷ்டி வாதிகளின் சமூக, யதார்த்த அடிப்படையிலான தொலைநோக்குச் சிந்தனையைத் தோற்கடித்தது. இது மிகவும் துரதிஷ்டவசமானதாகும். காரணம் சுதந்திரத்திற்கு முந்திய காலத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வாக சமஷ்டிவாத, தேசியவாத அல்லது பிரிவினைவாதக் கருத்துக்களை முன்வைக்கவில்லை. மாறாக அவர்கள் மத்தியில் அதிகாரப்பகிர்வையே வலியுறுத்தினர். திரு ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் ‘ஐம்பதுக்கு ஐம்பது’ பிரதிநிதித்துவக் கோரிக்கை இதற்கான உதாரணமாகும்.

1949ல் சமஷ்டிக்கட்சி உருவாகியதும், மண்ணில் விளைந்த அரசியலமைப்பு வாதங்களும் அதன் விளைவாக 1972 மற்றும் 1978ல் அரசியலமைப்புகளில் சமஷ்டி ஏற்பாடு பூரணமாக நிராகரிக்கப

1987ல் முதல் தடவையாக இலங்கை தன்து அடிப்படைச் சமூகக் குணாம்சத்தால் பாதிப்புற்றது. இது வெளியிலிருந்து, இந்தியாவின் சக்தி மிக்க செல்வாக்கினால் ஏற்பட்ட ஒரு விடயமாகும். இந்திய-இலங்கை ஒப்பந்தமும் அதன் விளைவான 13வது அரசியலமைப்புச் சீர்திருத்தமும் சிங்களத் தலைமைத்துவத்தினால் மனதின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டவை என்ற

***தாம் ஒரு தனித்துவமான தேசமென்று உணர்ந்த கண்டியர்கள் பொருளாதார சக்தி மற்றும் எண்ணிக்கை காரணமாக ஒற்றையாட்சி அமைப்பில் பெரும்பான்மையினராகிய கீழ்நாட்டுச் சிங்களவர்கள் தம்மீது ஆதிக்கம் செலுத்துவார்களென்று பீதியுற்றனர்.***

காரணத்தினால் அதிகாரப்பகிர்வு நோக்கிய சரியான திசையில் எடுத்து வைக்கப்பட்ட முதல் அடி தோல்வியில் முடிவடைந்தது.

1993-94 காலப்பகுதியில் ஏற்பட்ட தமிழர் அபிலாஷைகள் குறித்து சிங்கள அரசியல் சமூகத்தில் உளப்பாங்கு ரீதியிலான அசையா நியமக்கருத்துகளிலான மாற்றத்துக்கு ஜனாதிபதி குமாரதுங்க வழங்கிய தலைமைத்துவமே காரணமாகும். பிரிவினைக்கு மாற்றீடாக அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வினை முன்வைத்த முதல் பிரதான நீரோட்ட சிங்கள அரசியல் தலைவர் அவரேயாவர். ஆயினும் அரசியலமைப்புச் சீர்திருத்தம் சம்பந்தமான அவரது நிர்வாகத்தினரின் முயற்சிகள் படுதோல்வியாக முடிவடைந்தன.

இந்த வரலாற்று நிகழ்வுத் தொடரின் அடிப்படையிலேயே சமஷ்டிக் குணாம்சம் கொண்ட இறுதித்தீர்வு சம்பந்தமான அரசாங்க-எல்ரீரீஈ ஒஸ்லோ பிரகடனத்தை நோக்குதல் வேண்டும். ஓர் அரசாங்கம் தெற்கின் அரசியல் கலந்துரையாடலில் தன்னம்பிக்கையோடு 'சமஷ்டி' என்ற பதத்தைப் பயன்படுத்திய முதல் சந்தர்ப்பமும் இதுவேயாகும். தெற்கிலுள்ள விவாதம் சமஷ்டிக்கான எதிர்ப்பை விட கூடுதலாக எல்ரீரீஈ அமைப்பின் நல்லெண்ணம் குறித்த சந்தேகம் சம்பந்தமானதாகவேயுள்ளது. இந்த சந்தேகங்களில்

> **“இலங்கை இன்று வாழ்வாதாரமான நாற்சந்தியில் நிற்கிறது. பிரிவினையா அல்லது ஐக்கியமா? என்பதைத் தீர்மானிக்கும் ஓர் இறுதிச் சந்தர்ப்பம் இதுவென்று கூறினால் அது மிகையாகாது.”**

ஐக்கியமா? என்பதைத் தீர்மானிக்கும் ஓர் இறுதிச் சந்தர்ப்பம் இதுவென்று கூறினால் அது மிகையாகாது. மோதல் தரப்பினர் இறுதித் தீர்வென்று கூறும் விடயத்தின் பரந்த அடிப்படைகள் பொருண்மை மற்றும் நிறுவனங்கள் குறித்த பல பிரச்சினைகளை ஏற்படுத்துபவனவாக உள்ளன. ஆயினும், அரசியலமைப்புக்களை உருவாக்குவதில் நாம் கடந்த காலத்தில் இழைத்த தவறுகளைத் தவிர்ப்பதாயின், மோதலிலோ அல்லது அதன் தீர்வுக்கான உரையாடலிலோ சம்பந்தப்பட்ட நலன்பிரதிநிதிகள் அரசாங்கமும் எல்ரீரீஈ அமைப்பும் மாத்திரமல்ல என்பதை உறுதியாக மனதில் இருத்துதல் வேண்டும். சிவில் சமூகத்திலுள்ள பல்வேறு செயற்பாட்டாளர்களையும் உள்ளடக்கும் விதத்தில் இச்செயல்முறை பரந்த ஒன்றாக்கப்படுதல் வேண்டும். பங்கேற்பு இல்லாத, ஒளிவுமறைவின்மை இல்லாத அரசிலமைப்பாக்கல் செயல்முறை காரணமாக அனைவருக்கும் பரிச்சயமான, எதிர்கால அரசியலமைப்புப் பாயிர சொற்பிரயோகமான 'மக்களாகிய நாங்கள்' என்பது அதன் மகத்துவத்தை இழந்துவிடக்கூடும். இந்தக்கட்டுரை தற்போது ஆரம்பமாகியுள்ள சமஷ்டி குறித்த பொதுமக்கள் விவாதத்துக்கான பங்களிப்பாகும். பங்கேற்பை அதிகரிப்பதன் மூலம் இந்த விவாதத்தை விசாலித்தல்



வேண்டும்.

**ஜனநாயகத்திற்கும் அதிகாரப்பகிர்விற்குமிடையிலான போலியான இருபுடைத் தன்மை**

கடந்தவார 'ராவய' பத்திரிகையில் சமஷ்டி குறித்த ஐயங்களைப் போக்கிய விக்டர் ஐவன் தனது கட்டுரையை இலங்கையின் அரசியலமைப்புச் சீர்திருத்தக் கருத்திட்டம் இனப்பிரச்சினைத்தீர்வுக்கு மட்டுமே தேவைப்படுகின்றதென்றும் தவறான கருத்துணர்வு பற்றிக் கலந்துரையாடுவதன் மூலம் ஆரம்பித்துள்ளார். சந்தேகமின்றி அரசியலமைப்பு மீள்கட்டமைப்பு மோதல்கள் மலிந்த சமூகங்களைச் சமாதானம் நிறைந்தவையாக நிலைமாற்றம் செய்யும் செயல்முறைக்குப் பயனுள்ள கருவியாக விளங்கிய போதிலும், இலங்கையில் அது அரசாங்கத்தை மேலும் ஜனநாயகப்படுத்துவதற்கும் அவசியப்படுகின்றது. சமஷ்டி வடிவிலான நிறுவனங்களை நோக்கிய நகர்வு அரசை ஜனநாயகப்படுத்தும் ஒரு வழியாகும். வகையுதாரணமாக, பொதுமக்கள் இறைமையை பரவலாக்கிப் பகிர்வு செய்யும் பிராந்திய சுயாட்சி குறித்த உத்தரவாதம் பேராசிரியர் பெரில் சோண்டர்ஸ் அவர்களின் வார்த்தைகளில் கூறுவதாயின் பல்லினப்பாங்கிற்கு ஊக்குவிப்பாகவும், அரசாங்கத்தின் அதிகரித்த பிரதிவிளைவுச் செயற்பாட்டிற்கு வழியாகவும், பொது விவகாரங்களில் அதிகரித்த பொதுமக்கள் பங்கேற்பிற்கு வாய்ப்பாகவும் அமைந்துவிடும். சமஷ்டி ஏற்பாடு வழங்கும் அதிகாரக்கலந்தூடுபரவல் அனுகூலம் இலங்கையில் தற்போது அரசியலமைப்பு ஆட்சியின் குணாம்சமாக விளங்கும் அதிகாரத்துவத்திற்குத் தீர்வுமாகும். ஆயினும், அரசியலமைப்பு ஆட்சி என்றும் எண்ணக்கரு சட்டத்தின் ஆட்சியை மட்டுமன்றி நிர்வாகத்தின் சட்டச்சட்டகத்தின் ஆன்மாவாக விளங்கும் விழுமியங்கள் நிறைந்த அரசியல் செயல்முறைகளையும் உள்ளடக்கும் ஒன்றாகும். இந்த அரசியல் செயல்முறைகள் சுதந்திரத்திற்கும், ஜனநாயகத்திற்கும் பல்லினப் பாங்குக்கும் சகிப்புத்தன்மைக்கும் விரோதமான சமூக விழுமியங்களால் ஆட்டிப்படைக்கப்படும் வரையில் அது இலங்கை அரசியலமைப்பு மற்றும் அரசியல் நவீனத்துவ நிலையை அடைவதைத் தடுக்கும் பாரிய தடைக்கல்லாகவே விளங்கும்.

**அரசியல் பெரும்பான்மைகளுக்கு மட்டுப்பாடாக விளங்கும் சமஷ்டி**

சமஷ்டியென்பது இலங்கை அரசியல் சமூகத்தில் விளங்கும் பாரிய குறைபாடாகிய கட்டற்ற பெரும்பான்மை வாதத்திற்கும் ஒரு தீர்வை வழங்கி நிற்கிறது. இதுவே இலங்கையின் இனப்பிரச்சினைக்கான முக்கிய தனிக்காரணமாகும். இனத்துவம், மதம், பால்நிலை, பால் அல்லது அரசியல் அபிப்பிராயமென்று எதுவாகவிருப்பினும், உயர்வு மனப்பான்மை கொண்ட பெரும்பான்மையொன்று இருப்பது அக்குழுவில் இல்லாத ஏனையோருக்குப் பெரும் அச்சுறுத்தலாகவே அமையும். இனத்துவக்குழுக்கள் ஒன்றையொன்று அழிக்கும் பெரும்பான்மையினவாதம் குறித்த இலங்கை அனுபவத்தை மீண்டும் விபரிக்க வேண்டிய

*அரசியல் செயல்முறைகள் சுதந்திரத்திற்கும், ஜனநாயகத்திற்கும், பல்லினப் பாங்குக்கும், சகிப்புத்தன்மைக்கும், விரோதமான சமூக விழுமியங்களால் ஆட்டிப்படைக்கப்படும் வரையில் அது இலங்கை அரசியலமைப்பு மற்றும் அரசியல் நவீனத்துவ நிலையை அடைவதைத் தடுக்கும் பாரிய தடைக்கல்லாகவே*



அவசியமில்லை. வித்தியாசமாக இருப்பதற்கான உரிமையை ஏற்றுக்கொள்ளும் சமஷ்டி அரசுகள் எத்தகைய பெரும்பான்மையினராயினும் அவர்களைக் கட்டுப்படுத்தும் சாதனங்களையும், வழிமுறையமைப்புக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளன.

பெரும்பான்மை ஜனநாயகத்திற்கு எதிராக தனிநபர் மற்றும் கூட்டுப்பல்லினப் பாங்கினால் பூரணப்படுத்தப்படும், கலந்துரையாடல் ஜனநாயகத்தின் பெறுமதியை வலியுறுத்துகையில் சமஷ்டி எண்ணக்கரு எத்தகைய பல்லினப்பாங்கையும் பாதுகாத்து நிற்கிறது. இந்த வகையில் அநேகமான சந்தர்ப்பங்களில் சமஷ்டிக் கூட்டுக்கள் ஒப்பீட்டு ரீதியில் இறுக்கமானதும், நல்வாழ்வின் வெளிப்பாடுமாகிய உயர் அரசியலமைப்புக்களைக் கொண்டு விளங்குகின்றன. இங்கு மத்திய சட்டவாக்கத்துறையில் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் காற்றோட்டத்தையும் கலந்துரையாடலையும் உறுதிப்படுத்தும் இரண்டாவது சபையொன்று இடம்பெறுவதால் அரசாங்கத்தின் பல்வேறு படிகளிடையே உறவுகளும் சீர்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு, சமஷ்டியும் ஜனநாயகமும் பரஸ்பரம் ஒன்றையொன்று உயர்த்தும் இரு எண்ணக்கருக்களாகும். அதேவேளையில் அவை சமவலுவுடன் எதிர்ச்செயலாற்றுபவையாகவும் விளங்குகின்றன. அரசியலமைப்பு ரீதியான அரசு அரசியல் அதிகாரத்தின் கட்டுப்பாடு, கட்டமைப்பு மற்றும் வரையறை குறித்ததெனில், (பெரும்பான்மை வாத அல்லது அதிகாரவாதம் குறித்தது) அக்டன் பிரபுவின் வார்த்தைகளில் 'ஜனநாயகத்தின் மீதான சகல கட்டுப்பாடுகளிலும் மிகவும் பயனுறுதி வாய்ந்ததும், அனுகூலமிக்கதுமான ஒன்று சமஷ்டியே ஆகும். சமஷ்டி முறைமை, இறைமை அதிகாரத்தை மட்டுப்படுத்தி, அடக்குகின்றது. இந்த அதிகாரத்தைப் பிரிவினை செய்து, ஒரு சில குறிப்பிட்ட உரிமைகளை மாத்திரம் அரசாங்கத்திற்கு வழங்குவதன் மூலம் இது செயற்படுத்தப்படுகின்றது. பெரும்பான்மையினர் மட்டுமன்றி, முழு மக்களினதும் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் ஒரே வழி இதுவேயாகும்.'

**இலங்கையில் சமஷ்டி எண்ணக்கருவின் தோற்றம்**

தற்போதுள்ள அரசியலமைப்பு ஏற்பாட்டின் ஜனநாயக ரீதியான விமர்சனம் குறித்த இந்தப் பரந்த சட்டத்தினுள்ளேயே ஆழமாக வேரோடிய இனத்துவப் பிரிவினைகள் சம்பந்தமாக குறித்துரைத்த முக்கியமான பிரச்சினைகளுக்குச் சீர்திருத்தச் செயற்பாடுகள் மூலமான தீர்வுகள் தேடப்பட வேண்டும். இந்த வகையில் முதலாவது ஆதாரநியாயம் சமஷ்டி என்னும் பதம். இறுக்கமற்ற முறையில்

பயன்படுத்தப்படும்போது, அனைத்துக்குமான ஒரு தீர்வைக் குறிப்பதல்ல என்பதாகும். எனினும், இது பிரிவினை அல்லது ஆட்புலரீதியிலான சுயநிர்ணயக்கோரிக்கை போன்ற கொந்தளிப்பான அரசியல்

**பல்லினப்பாங்கில் ஐக்கியம்**

இலங்கையின் ஒழுங்கமைப்பான சமூகத்தை உருவாக்கும் பல்வேறு தனித்துவங்களின் அடிப்படையில் ஓர் ஐக்கிய இலங்கை கட்டியெழுப்பப்படுதல் வேண்டும். அது அதனுள்ளிருக்கும்


எடுத்துக்காட்டுவது போன்று சுதந்திர அரசுகள் பொதுவான இலட்சியங்களின் கூட்டு நிர்வாகத்திற்கென ஒன்றிணைகின்றன. இலங்கையில் எதிர்கால அரசியலமைப்புச் செயல்முறை அரசினுள் இடம்பெறும் சமஷ்டியாக்கம் குறித்ததாக இருப்பதால் அது வித்தியாசப்படுகின்றது. எப்படியாயினும், சமஷ்டி எண்ணக்கருவென்பது பல்லினப்பாங்கில் ஐக்கியம் குறித்ததாகும். இதன் கருத்து சுயாட்சி மற்றும் பகிர்வு ஆட்சி என்பதாகும். அதாவது, மத்தி பிராந்தியங்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்கையில் அரசாங்கத்தின் சில விடயப்பரப்புகளுக்கும் பொறுப்பாகவிருக்கையில், பிராந்தியங்கள் ஏனைய விடயப்பரப்புக்களில் தம்மைத்தாமே நிர்வகித்துக் கொள்கின்றன. மிகவும் பொதுவாக, பாதுகாப்பு, நாணயக்கொள்கை மற்றும் வெளிநாட்டுறவுகள் என்பவை மத்திய அரசிற்குரிய அதிகாரங்களாகும். பிரத்தியேகமாக நிதி மற்றும் செலவினப் பொறுப்புக்கள் போன்ற அரசாங்கங்களுக்கிடையிலான ஒத்துழைப்புக் குறித்த விடயங்களில் அநேகமான சமஷ்டி அரசுகள் பாரிய விதிமுறையான மற்றும் விதிமுறையற்ற கட்டமைப்புக்களைக் கொண்டு விளங்குகின்றன. சமஷ்டி அரசாங்கங்களிடையிலான உறவுகள் மத்திக்கும் பிராந்தியங்களுக்குமிடையிலான உறவுகள் மட்டுமன்றி, பிராந்தியங்களுக்கிடையிலான உறவுகளுமாகும். அவை அதிகாரப்பகிர்வு மற்றும்

***மீளமைக்கப்படும் இலங்கை அரசு உண்மையில் ஜனநாயக, சமஷ்டித் தன்மையைக் கொண்டிருப்பின் சர்வதேச அனுபவங்களிலிருந்து பெறப்படும் ஆட்புலப்பிரிவினை அச்சுறுத்தலுக்கெதிரான கோட்பாட்டு ரீதியான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் கொண்டு விளங்கும்.***

இயக்கவியலைக் கையாளுவதில் ஓர் ஊயிர்த்துடிப்பான எண்ணக்கருவாகும். முன்பே கூறியது போன்று, ஓர் எதிர்கால இலங்கை அரசின் பரந்த வரைவெல்லைகள் கடந்த வருடம் ஒஸ்லோவில் இலங்கை அரசாங்கத்தினாலும், எல்ரீரீஈ அமைப்பினாலும் வகுத்தமைக்கப்பட்டன. ஐக்கிய இலங்கையுள் அமையும் புதிய நிறுவனங்கள் சமஷ்டித் தன்மையைக் கொண்டதாகவும் தமிழ் மக்களின் வரலாற்று வாழிடங்களில் அவர்களுக்கு உள்ளக சுயநிர்ணயத்தை வழங்கும் கோட்பாட்டிற்கு இயைபுள்ளதாகவும் விளங்கும். இவ்வாறாக அரசியலமைப்பை வரைவோரின் பணி இலங்கைக் குடியரசின் ஐக்கியம் மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டினுள் தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமைக்கு வழிவகுக்கும். பிராந்திய சுயாட்சியை உறுதிப்படுத்தும் கட்டமைப்புக்களை வடிவமைப்பதாக அமையும்.

கூட்டுத்தனித்துவங்களை கலாசாரப் பல்லினப்பாங்கு மற்றும் செழிப்பின் மூலவளமாக மாத்திரமன்றி, உள்ளக சுயநிர்ணயம் போன்ற உரிமைகளைக் கூட்டாகப் பிரயோகிக்கும் உரிமையுள்ள குழுக்களாகவும் அங்கீகரித்தல் வேண்டும். இப்பரந்த சமூக அடித்தளத்தைப் பிரதிபலித்தால் மட்டுமே எதிர்கால அரசின் சட்டநிலைத்தகவை உறுதிசெய்ய முடியும். இந்த அடிப்படையில் கணிசமான சுயாட்சி அரசியலமைப்பு ரீதியாக ஏற்படுத்தப்பட்டு, பெரும்பான்மை ஆதிக்க மத்திய அரசினால் வழங்கப்படும் சலுகையாகவின்றி, மீளுயர் அரசியலமைப்பின் ஒப்பந்த உள்ளடக்க சாதனமாக நிறுவப்படுதல் வேண்டும்.

எவ்வாறாயினும், சமஷ்டியென்பது பிராந்திய சுயாட்சிக்குச் சாதகமாக விடயங்கள் வலியுறுத்தப்பட்ட பகுதி ஆவணம் அன்று, மையக்குவிவான சமஷ்டிச் செயல்முறைகள்



சகவாழ்வு குறித்த ஒருங்கிணையும் வழிமுறை யமைப்புக் களையும் பிரதிநிதித்துவம் செய்கின்றன. இக்குறிப்பிட்ட அம்சம் சமஷ்டி முறைமைகளின் அடையாள-மாகிய சமாதான, சௌஜன்ய ஒத்துழைப்புக் குறித்த ஒருவரிலொருவர் தங்கிநின்றமை விளங்குகின்றது.

சமஷ்டி அரசுகளின் கட்டமைப்புக்கள், நடைமுறைகள் மற்றும் விழுமியங்களை எடுத்து நோக்குகையில், சமஷ்டி பிரிவினைக்கான ஒரு வழிமுறையென்று பிரயத்தனப்பட்டு முன்வைக்கப்படும் வாதம் நிருபிக்கப்படக்கூடிய ஒரு கட்டுக்கதையாகும். உதாரணமாக, ஐக்கிய அமெரிக்க இராஜ்ஜியங்கள் உருவாகிய போது அரசியலமைப்பு மாநாட்டில் வகுத்தமைத்த சமஷ்டித் திட்டத்தை எதிர்த்தோர் உறுப்பு அலகுகளின் உள்ளக விடயங்களில் முறையற்ற விதத்தில் தலையீடு செய்யக்கூடிய ஒரு மத்திய அரசாங்கம் உருவாகுதல் குறித்துக்கவலை கொண்டிருந்தனர். நியூயோர்க் செய்திப் பத்திரிகைகளில் ஒரு தொடரான கட்டுரைகளை எழுதுவதன் மூலம் அலெக்ஸாண்டர் ஹமில்டன், ஜேம்ஸ் மாடிசன், மற்றும் ஜோன் ஜே என்போர் சமஷ்டி அமைப்பை மிகவும் மெச்சத்தக்க விதத்தில் பாதுகாத்து வாதாடினர். இக்கட்டுரைகள் பின்னர் தொகுக்கப்பட்டு, சமஷ்டி ஆவணங்கள் என்ற பெயரில் வெளியிடப்பட்டன. சமஷ்டி வாதி இல. 21 என்னும் கட்டுரையில் ஹமில்டன் சமஷ்டி ஐக்கியத்தின் பிரதான அனுகூலம் சுயாட்சி அமைப்பு அலகுகள் சூழமைவில் அது அரசியல் முறைமையில் பலாத்காரமான மாற்றங்களைத் தடுக்க உதவுவதாகுமென்று வாதிட்டார். இவ்வாறாக அமைப்பு அலகுகள் அரசியலமைப்பின் ஒளியில் தமது சொந்த விவகாரங்கள் குறித்துத் தாமே சுதந்திரமாகத் தீர்மானமெடுக்கும் உரிமையைக் கொண்டிருக்கையில் சமஷ்டி எண்ணக்கரு பிரத்தியேக வன்முறை மூலம் இடம்பெறும் ஒருதலைப்பட்சமான பிரிவினை போன்ற நடவடிக்கைகளைத் தடுக்கின்றது. இருநூறு வருடங்களுக்கும் மேற்பட்ட காலத்திற்குப் பின்னர் கெபெக் பிரிவினை சம்பந்தமான கனடிய உயர் நீதிமன்றத்தின் உன்னதமான தீர்ப்பு இதே உணர்வுகளையே எதிரொலித்தது. நீதிமன்றம் கனடாவின் அத்திவாரக் கோட்பாடுகளாக ஜனநாயகம், சமஷ்டி, அரசியலமைப்பு வாதம் மற்றும் சட்டத்தின் ஆட்சியும், சிறுபான்மை யினங்களுக்கான மதிப்பும் என்பவற்றை இனங்கண்டது. அரசியல் மாற்றங்களை நாடும்போது அரசியல் செயற்பாட்டாளர்கள் கோட்பாட்டு ரீதியாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் அடிப்படைக்கடமை அவர்களுக்கு இருப்பது இத்தாராளவாத அத்திவாரங்களை மேலும் பலப்படுத்தும் விடயமென்றும் நீதிமன்றம் மேலும் சுட்டிக்காட்டியது. இவ்வாறாக, மீளமைக்கப்படும் இலங்கை அரசு உண்மையில் ஜனநாயக, சமஷ்டித் தன்மையைக் கொண்டிருப்பின் சர்வதேச அனுபவங்களிலிருந்து பெறப்படும் ஆட்புலப்பிரிவினை அச்சுறுத்தலுக்கெதிரான கோட்பாட்டு ரீதியான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் கொண்டு விளங்கும். மேலும், யூகோஸ்லாவியாவின் துன்பகரமான பிரிவினை அனுபவங்களுக்குப் பின்னர் சர்வதேச சமூகம் இனமோதல்களுக்குப் பிரிவினைத் தீர்வுகள் சம்பந்தமான கூடுதல் ஐயப்பாடுகளை வெளியிட்டு வருகின்றது. இனத்துவப் பதற்ற நிலைகளைக் கையாளவும் முகாமைத்துவம் செய்யவும் தற்போது வழங்கும் ஆதிக்கப்போக்குள்ள சிந்தனை சமஷ்டி மாற்று வழிகளையும் அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளையும் தேடுவதாகும். ●

# சமஷ்டித் தீர்வு குறித்து உடனடி இணக்கப்பாட்டை எதிர்பார்க்க வேண்டாம்



மிலிந்த மொரகொட

*பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான மற்றும் உயர் தொழில்நுட்ப அமைச்சர்*

**ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் எல்.ரீ.ரீ.ஈ அமைப்புக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை ஒருவருட காலத்தைப் பூர்த்தி செய்துள்ளதோடு, இரு தரப்பினரும் சில சுற்றுக்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் நடத்தி முடித்துள்ளனர். ஆயினும், இறுதியாக இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைச் சுற்றை நோக்கும் போது சமாதானப் பேச்சுவார்த்தை ஏதோ ஒரு மட்டத்தில் சிறைப்பட்டுத் தேங்கி நிற்பதாகச் சில அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். அரசாங்கத்தின் சமாதானப் பேச்சுவார்த்தைக் குழுவில் ஒரு முக்கிய உறுப்பினரென்ற வகையில் இந்த சிறைப்படுதல் சம்பந்தமாக உங்களின் கருத்து என்ன?**

நாம் தீர்வொன்றைத்தேடி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பது ஐம்பது வருடகாலச் சமூகப் பிரச்சினையொன்று சம்பந்தமாகவாகும். அதேபோன்று இருபது வருடகால சிவில் யுத்தம் சம்பந்தமாகவாகும். இன்றுவரை இனப்பிரச்சினையின் தாக்கம் சமூகம், பொருளாதாரம் மற்றும் கலாசாரம் போன்ற சகல துறைகளிலும் ஏற்பட்டுள்ளது. இப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வொன்றைத் தேடாமல் எமது நாடு ஓரடிகூட முன்னே எடுத்து வைக்க முடியாது. ஆகவே, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதே இன்று எம்முன்னுள்ள முக்கிய பணியாகும். அப்படியாயின் ஐம்பது வருடகாலமாகப் பிரவாகமாகப் பெருகிவந்த பிரச்சினைக்குத் துரித தீர்வொன்றை எதிர்பார்க்க முடியாது. அது நடைமுறை சாத்தியமற்ற ஒரு விடயமாகும். ஒரு வகையில் பார்த்தால் அது மூடத்தனமான ஓர் எதிர்பார்ப்பும் சிந்தனையுமாகும்.

ஆகவே, ஒவ்வொரு மாதமும் இடம்பெறும் சமாதானப் பேச்சுவார்த்தையின் மந்திர வித்தைகளை எதிர்பார்க்க வேண்டாம். எமக்கு மந்திர வித்தைகளைப் போன்று வெற்றுப்பெட்டியிலிருந்து முயலொன்றை எடுத்துக் காண்பிக்க முடியாது. சமாதானப் பேச்சுவார்த்தையென்பது இவ்வாறு மந்திரவித்தை காண்பிக்கும் இடம் அல்ல. உலகில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற எந்த இடத்திலும் மந்திரவித்தை காண்பிக்கப்படவில்லை. சர்வதேச அனுபவத்தின் பிரகாரம் சில சமாதானப் பேச்சுவார்த்தைகள் வருடக்கணக்காக இழுபறி நிலையில் இருந்துள்ளன. சில சந்தர்ப்பங்களில் பேச்சுவார்தைகளில் சில உடன்பாடுகளை எட்டுவதற்கும் பல வருடங்கள் காலம் எடுத்துள்ளது. ஆகவே, ஐம்பது வருடகாலப் பிரச்சினைக்கு ஒரு வருட காலத்தினுள் தீர்வு காண எதிர்பார்ப்பது வேடிக்கையானதாகும். சமாதானப் பேச்சுவார்தையென்பது ஒரு மந்திரஜாலக் காட்சியல்ல. ஆகவே, எம்மிடமிருந்து மந்திரஜால வித்தை எதையும் எதிர்பார்க்க வேண்டாம்.

**ஆயினும், அரசாங்கம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சமாதானப் பேச்சுவார்த்தைச் சுற்று ஒன்றுக்குச் செல்வது மந்திரவித்தைக் காட்சி ஒன்றுக்கான ஆயத்த நடவடிக்கை போன்றேயாகும். ஒவ்வொரு சமாதானப் பேச்சுவார்த்தைச் சுற்றுக்கும் செல்லுமுன்னர் அச்சமாதானச் சுற்று சம்பந்தமாக மக்களிடையே பெருமளவிலான எதிர்பார்ப்புகள் உருவாகக் கூடிய வகையில் ஊடகப் பிரசாரங்களை அரசாங்கம் மேற்கொள்ளுகின்றது. விஷேசமாக அரசாங்கத்தின் சமாதானப் பேச்சுவார்த்தைக் குழுவின் பிரதிநிதிகள் ஊடகங்களில் சொல்லும் கூற்றுக்களின் மூலம் இத்தகைய மந்திரவித்தைக் காட்சிகள் சம்பந்தமான ஆர்வத்தை அதிகரிக்கின்றார்கள், இல்லையா?**

நான் உங்கள் சஞ்சிகைக்கு இதற்கு முன்னரும் பேட்டியளித்துள்ளேன். அத்தகைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நான் மந்திரவித்தை காண்பிக்க முற்பட்டதில்லை. இச்சமாதானச் செயல்முறை நீண்டதும், கஷ்டமானதுமான ஒரு பயணமென்றே நான் எப்பொழுதும் கூறி வந்துள்ளேன். நாம் நல்ல எண்ணத்தோடும் நேர்மையான விசுவாசத்தோடும் இப்பயணத்தில் இறங்கியுள்ளோமென்பதையே நான் அன்றும் கூறினேன், இன்றும் கூறுகின்றேன். ஆகவே என்னிடம் இக்கேள்வியை கேட்பது நியாயமில்லை. இதைவிட இது குறித்து மேலும் எதுவும் கூறுவதற்கும் எனக்கு விருப்பமில்லை.

இனப்பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ள சிங்கள மற்றும் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையீனங்கள் மற்றும் சந்தேகங்கள் உள்ளன. வடக்கில் ஒரு பரம்பரையினா் உள்ளனா். அவா்கள் சிங்களவரென்றால் இராணுவ உடை அணிந்த சிங்களப் படை வீரா்களென்று எண்ணுகின்றனா். தெற்கிலுள்ள இன்னுமொரு பரம்பரையினா் தமிழ் மக்களென்றால் பயங்கரவாதிகள் என்று எண்ணுகின்றனா். ஒவ்வொரு தமிழரையும் அவா்கள் பயங்கரவாதியாகவே நோக்குகின்றனா். சிவில் யுத்த காலத்திலேயே இந்த இரு பரம்பரையினரும் பிறந்து இளைஞா்களாகவும், யுவதிகளாகவும் வளா்ந்துள்ளனா். ஆகவே இந்தச் சந்தேகங்களை நீக்கி முன்செல்லும் பயணம் இரு தரப்பினருக்குமே கடினமான ஒன்றாகும். இனப்பிரச்சினைக்கு ஒரு வருட காலத்தினுள் தீா்வு காணமுடியுமென்று எண்ணுவது தவறானதாகும்.

**அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை காரணமாக எல்ரீரீஈ அமைப்பு பாதுகாப்பு மற்றும் பகைமைத் தணிப்பு குழுவிலிருந்து வெளியேறத் தீா்மானித்துள்ளது. இந்த நிலைமை சமாதானச் செயல்முறைக்கு இடையூறு விளைவிக்காதா?**

சமாதானம் ஏற்பட்டுள்ளதென்றால், யுத்தம் நிறுத்தப்பட்டுள்ளதென்றால்



**எல்ரீரீ அமைப்பு உத்தியோகபூர்வமாக சமஷ்டி முறைக்கு இணக்கம் தெரிவித்துள்ளது. எல்ரீரீ சமஷ்டி முறையென்று இனங்காணும் சட்டகம் குறித்து அவர்களின் இயக்கத்தினுள் ஆழமான உள்ளகக் கலந்துரையாடல்கள் இடம்பெறும். விசேடமாக திரு அன்டன் பாலசிங்கம் வன்னிக்குச் சென்று இது குறித்துக் கலந்துரையாடல்களை நடத்திய பின்னர் மார்ச், ஏப்ரல் மாதமளவில் அரசியல் குழுவில் நாம் இது குறித்து ஆழமாகக் கலந்துரையாட முடியுமென்பது எமது மதிப்பீடு ஆகும்.**



பொருட்களின் விலைகளை ஏன் குறைக்க முடியாதென்று தெற்கின் மக்கள் இன்று கேள்வி எழுப்புகின்றனர். இதுவே பொருளாதாரப் பிரச்சினை குறித்து இன்று தெற்கிலிருந்து முன்வைக்கப்படும் முக்கிய தர்க்கமாகும். அதேபோன்று, சமாதானம் ஏற்பட்டிருந்தால் ஏன் நாம் எமது வீடுகளுக்குத் திரும்ப முடியாது என்று வடக்கின் மக்கள் கேட்கின்றனர். வடக்கைப் போன்று தெற்கிலும் மக்கள் சமாதானத்தின் பயன்களைக் கேட்கின்றனர்.

எதிர்கால அதிஉயர் பாதுகாப்பு வலயங்களின் பிரச்சினை சம்பந்தமான முக்கிய விடயம் மக்களை மீண்டும் குடியேற்றுவதாகும். நான் இப்பிரச்சினையை நோக்குவது அரசியலமைப்புப் பிரகாரமாகவோ, சட்டப்பிரகாரமாகவோ அல்ல. நான் இதை நோக்குவது மனிதாபிமானப் பிரச்சினையாக மட்டுமே. எமது நாட்டின் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம்கள் பத்துலட்சக் கணக்கானோர் இன்று வீடுவாசல்களைவிட்டு வெளியேற நேர்ந்துள்ளது. இதற்குக் காரணம் இனப்பிரச்சினையும், யுத்தமுமாகும். இதுவே பிரச்சினையாகும். இப்பிரச்சினை அரசியல் தீர்வொன்றினூடாகவே அகற்றப்படுதல் வேண்டும்.

எதிர்கால அதிஉயர் பாதுகாப்பு வலம் சம்பந்தமாக எல்ரீரீ அமைப்புக்கும் அரசாங்கத்துக்குமிடையில் கருத்துவேறுபாடுகள் நிலவுகின்றன. இது குறித்து இன்னமும் இணக்கப்பாடு ஏற்படவில்லை. அது ஒன்றும் இரகசியமல்ல. இந்த நிலைமை காரணமாக பாதுகாப்பு மற்றும் பகைமை தணிப்புக் குழுவில் பிரச்சினை ஏற்பட்டது. இக்குழுவில் திருவாளர்கள் ஒஸ்டின் முனசிங்கவும் எல்ரீரீ அமைப்பின் கருணாவும் அங்கம் வகித்தனர். நான் இவர்கள் இருவரையும் திருவாளர்கள் என்று அழைத்ததன் காரணம் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் அனைவரதும் பதவிநிலை எதுவாகவிருந்த போதிலும், அவர்களைத் திருவாளர் (மிஸ்டர்) என்று அழைக்கவேண்டுமென்று மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை

வலியுறுத்துவதற்காகும். பாதுகாப்பு மற்றும் பகமை தணிப்புக் குழுவில் பிரச்சினை ஏற்பட்டுள்ள போதிலும், அதைப்பிரதிநிதித்துவப்படுத்திய திரு. ஒஸ்டின் முனசிங்க மற்றும் திரு. கருணா என்போர் பிரதிநிதித்துவப்படுத்தும் வேறொரு குழுவின் மூலமாக நாம் செயலாற்றி வருகின்றோம். ஆகவே சமாதானப் பேச்சுவார்த்தை 'சிறைப்பட்டுள்ளது' என்று கூறுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. சமாதானப் பேச்சுவார்த்தை ஒரே வேகப்பண்போடு, ஒரே தளத்தில் சீராகச் செல்லும் ஒன்றல்ல. சில சந்தர்ப்பங்களில் இடர்கள், இடையூறுகளை எதிர்கொள்ள நேரிடும். அவற்றுக்கு முகம் கொடுத்து, செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவே இருசாராரும் முயற்சியெடுக்கின்றனர்.

எல்ரீரீஈ அமைப்புடன் நாம் பேசும் சந்தர்ப்பங்களில் அவர்கள் குறித்த ஐயுறவுகள் மற்றும் சந்தேகங்களை அவர்களிடம் நேரடியாகத் தெரிவிக்கின்றோம். எல்ரீரீஈ அமைப்பும் அரசாங்கம் குறித்து எழும் சந்தேகங்களை வெளிப்படையாகத் தெரிவிக்கின்றனர். சந்தேகம் நிலவும் விடயங்கள் குறித்துக் கதைத்து, பரஸ்பர விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள நாம் முயற்சி எடுக்கின்றோம். நாம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருப்பது எதிர்காலம் குறித்த ஒரு நேரசூசி அல்லது உத்தி மற்றும் தந்திரோபாயம் குறித்த தயாரிப்புக்களுடன் அல்ல.

**எதிர்காலத்தில் மிகவும் முக்கியமான விடயமாக விளங்கப்போவது இரு தரப்பினரும் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் குழுக்களில் ஏற்படும் இணக்கப்பாடே என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. எல்ரீரீஈ அமைப்பினர் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப்பகிர்வைத் தாம் ஏற்றுக்கொள்வதாக ஏற்கனவே அறிவித்துள்ளனர். அரசாங்கம் இது சம்பந்தமாக பிரதிவிளைவைக்காட்டுவது எவ்வாறு?**

எல்ரீரீஈ அமைப்பு உத்தியோகபூர்வமாக சமஷ்டி முறைக்கு இணக்கம் தெரிவித்துள்ளது. எல்ரீரீஈ சமஷ்டி முறையென்று இனங்காணும் சட்டகம் குறித்து அவர்களின் இயக்கத்தினுள் ஆழமான உள்ளகக் கலந்துரையாடல்கள் இடம்பெறும். விசேடமாக திரு அன்டன் பாலசிங்கம் வன்னிக்குச் சென்று இது குறித்துக் கலந்துரையாடல்களை நடத்திய பின்னர் மார்ச், ஏப்ரல் மாதமளவில் அரசியல் குழுவில் நாம் இது குறித்து ஆழமாகக் கலந்துரையாட முடியுமென்பது எமது மதிப்பீடு ஆகும். ஆயினும், இப்பொழுதே எமக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றுக்குச் செல்ல முடியாது. அது குறித்து எதிர்பார்ப்புகளை வைத்திருப்பதும் நல்லதல்ல. இப்பேச்சுவார்த்தைகள் மிகவும் ஆழமான முறையில் இடம்பெறுதல் வேண்டும். அதன்மூலம் தான் தீர்வொன்று ஏற்பட முடியும். எல்ரீரீஈ அமைப்பு சமஷ்டி முறையின் கீழ் அதிகாரப்பகிர்வு ஏற்பாட்டுக்கு இணக்கம் தெரிவித்தது பெரிய விடயமாகும். சிலர் கூறுவது போன்று சமஷ்டி முறை மூலம் நாடு பிரிவடைவதனால் இந்தியா பிளவுபடுதல் வேண்டும்.


**"வடக்கு, கிழக்கின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் நிறுவப்பட்டுள்ள சர்வதேச அமைப்பில் ஜப்பான் அங்கத்துவம் வகிக்கின்றது. இந்த விடயம் இன்று ஜப்பானிய அரசியலிலும் இடம்பிடித்திருப்பது விசேடமான நிகழ்வாகும்."**

**அதிகாரப்பகிர்வு குறித்த இத்தீர்வை அரசியலமைப்பில் உள்ளடக்கி, சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்கு அர எதிர்பார்க்கும் காலச் சட்டகமொன்று உள்ளதா?**

அப்படிக் கூற முடியாது. எல்ரீரீஈ போன்ற அமைப்புடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும்போது நேரசூசி ஒன்றை வைத்திருப்பது ஜனநாயக அரசாங்கதிற்கு அனுகூலமாக அமையாது. அத்தகைய ஒரு விடயம் ஒரு சவாலாக மாறக்கூடும். நாம் மிகவும் நேர்மையுடனேயே பேச்சுவார்த்தைகளுக்குச் சென்றுள்ளோம். எல்ரீரீஈ அமைப்பைச் சிறைவைக்கும் அல்லது கஷ்டங்களில் தள்ளும் விதத்தில் அதற்கான திட்டங்களுடன் நாம் பேச்சுவார்த்தைக்குச் செல்லவில்லை.

**எமது நாட்டின் சமாதான முயற்சிகளுக்கு இப்பொழுது ஜப்பான் தெளிவான முறையில் அனுசரணை வழங்கி வருகின்றது. ஜப்பானிய அனுசரணை சம்பந்தமாக இந்தியா கவலையடைந்துள்ளதாகவும் இது குறித்து ஜப்பானிய வெளிநாட்டமைச்சரை எச்சரிக்க இந்தியா தயாராகி வருவதாகவும் 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது. எமது சமாதான முயற்சிகளில் நேரடியாகப் பங்கு கொள்ளாத இந்தியா தெரிவிக்கும் எதிர்ப்பு இறுதி ஆய்வில் மிகவும் தீர்மானகரமான தாக்கத்தை ஏற்படுத்துவதைத் தவிர்க்க முடியாது போகுமென்பது உண்மையல்லவா? இந்த எதிர்ப்பை அரசாங்கம் சமாளிப்பது எவ்வாறு?**

வடக்கு, கிழக்கின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் நிறுவப்பட்டுள்ள சர்வதேச அமைப்பில் ஜப்பான் அங்கத்துவம் வகிக்கின்றது. இந்த விடயம் இன்று ஜப்பானிய அரசியலிலும் இடம்பிடித்திருப்பது விசேடமான நிகழ்வாகும். இரண்டாம் உலக மாகாயுத்தத்தின் பின்னர் ஜப்பான் இவ்வாறு ஓர் அரசியல் தரப்பாக இத்தகைய ஒரு பிரச்சினையில் தலையீடு செய்வது இதுவே முதல் தடவையாகும். ஜப்பான் இதுவரை காலமும் பின்பற்றியது சர்வதேச மாநாடுகளுக்கு நிதியுதவி செய்யும் கொள்கையை மாத்திரமேயாகும். அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகள் கூறும்வகையில் ஜப்பான் காசோலைகளை எழுதி வழங்கி வந்தது. இப்பொழுது இந்தக் காசோலை எழுதும் பாத்திரத்திலிருந்து விலகி, அரசியல் அனுசரணை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய அவசியம் ஜப்பானுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் தான் ஜப்பான் எமது பிரச்சினையில் மிகவும் தெளிவான முறையில் பங்குவகிக்க முயற்சி செய்கின்றது.



இத்தகைய தலையீடு நீங்கள் கூறுவது போன்று இந்தியாவுக்கு எந்த வகையிலும் பிரச்சினையாக மாறிவிடவில்லை. நோர்வேயைப் போன்று ஜப்பானும் இந்தப் பிரச்சினையில் இந்தியாவின் முக்கியத்துவத்தை அறிந்து வைத்துள்ளது. அதனால் அவர்கள் இந்தியாவிற்குத் தகவல்களை வழங்குகின்றனர். இந்தியா அறியாத விதத்தில் எதுவும் இரகசியமான முறையில் இடம்பெறவில்லை. இந்தியா இச்சமாதானச் செயல்முறையின் உள்ளக நடவடிக்கைகளில் சம்பந்தமுறாதிருந்த போதிலும் சமாதானச் செயல்முறையினுள் அவர்களும் உள்ளனர்.

மறுபுறத்தில் எமது பிரதமர் இந்தியப் பிரதமருடன் நேரடி உறவுகளைப் பேணிவருகின்றார். எமது சமாதானச் செயல்முறையின் முன்னேற்றம் குறித்து எமது பிரதமர் திரு. வாஜ்பாய்க்கு நேரடியாகவே விளக்கமளித்து வருகின்றார். நானும் அடிக்கடி இந்தியாவுக்கு விஜயம் செய்து அரசதரப்பு அதிகாரிகள் மற்றும் எதிர்க்கட்சியினருக்கு விளக்கமளித்து வருகின்றேன்.

ஆகவே இங்கு இந்தியாவிற்கு மறைக்க வேண்டிய இரகசியம் எதுவும் எம்மிடமில்லை. நாம் ஏனைய நாடுகளைவிட இந்தியா பற்றி கூடுதலான கவனம் செலுத்தி வருகின்றோம்.

நேர்கண்டவர்
தனஞ்ஜய அபேசேகர

# அரசைக் கட்டியெழுப்பும் பலம் வாய்ந்த சங்கிலி



**கலாநிதி ஜயந்த செனிவிரத்ன**
சிரேஷ்ட விரிவுரையாளர்
களனிப் பல்கலைக்கழகம்

சமஷ்டி என்னும் சொல் சிங்கள சமூகத்தில் பெருமளவு பீதியை உண்டுபண்ணுவதற்கு உபயோகிக்கப்பட்ட சொல் என்பதை ஒன்றும் புதிதாகக் கூறவேண்டிய அவசியமில்லை. இந்த அர்த்தமில்லாத பயம் உருவாக்கப்பட்டதன் காரணம் தமிழ் தேசியவாதம் மேலோங்குவதைத் தடுப்பதற்கே ஆகும். இதற்குப் பொறுப்பானவர்கள் இனவாத அரசியலில் தங்கிநின்று பிழைப்பு நடத்தும் தலைவர்களும் இனவாதச் சேற்றில் சிக்கி புத்தி பேதலித்திருந்த சிங்களப் புத்திஜீவிகளுமாவர். இன்றுகூட இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு சமஷ்டி முறைமை மூலம் தீர்வு காண்பதற்கு இலங்கை அரசாங்கமும் எல்ரீரீஈ அமைப்பும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள வேளையிலும் இவர்களின் குரல்கள் கேட்கின்றன. என்னைப் பொறுத்தவரையில் இந்த இணக்கப்பாடு ஒரு நியாயமான தீர்வை எட்டவும், நாடு பிளவுபடுவதைத் தவிர்ப்பதற்கும் சமஷ்டி முறைமை மூலம் அரசை மீண்டும் சீரமைத்துக் கொள்வதற்கும் பெரிதும் உதவும். இது இலங்கையின் சகல இன மக்களும் ஐக்கியமான ஒரு தேசத்தினுள் வாழுவதற்குக் கிடைத்த மகத்தான சந்தர்ப்பமாகும். (ஒரு வேளை இதுவே இறுதிச் சந்தர்ப்பமாகவும் அமையக்கூடும்).

## இனத்துவக் குழுக்களைக் கட்டியெழுப்புதல்

அரசை மீண்டும் சீரமைப்பது என்பதன் மூலம் இங்கு நாம் கருதுவது எதை? சுதந்திரத்தின் பின்னர் அரசைக்கட்டியெழுப்பும் பணி தேசிய இனங்களைக் கட்டியெழுப்பும் விதத்தில் இடம்பெறவில்லையென்பது நாமனைவரும் அறிந்த ஒரு விடயமாகும். ஐரோப்பிய முறைமையாகிய தேசிய அரசு என்பதை அதே விதமாக நாம் பயன்படுத்திய போது ''ஓர் இனம் - ஒரு தேசம்'' என்னும் கோட்பாட்டின் அடிப்படையிலேயே அது இடம்பெற்றது. அதன் பிரகாரம் பிரதான தேசிய இனம் (எண்ணிக்கையில் அதிகமானோர்) அரசின் பங்குதாரிகளாக மாறினர். இதன் விளைவு பிரதான தேசிய இனம் தற்காலிகமாக விவேகமற்ற மகிழ்ச்சியில் திளைத்ததாகும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு

*அக்காலத்தில் மக்களின் மனங்களைப் பெருமளவுக்கு கவர்ந்திருந்த தலைவராகிய திரு. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க இலங்கைக்கு மிகவும் பொருத்தமான அரசியல் முறைமை சமஷ்டியே என்று தெரிவித்திருந்தார். 1926ல் இலங்கையின் சமஷ்டி அரசாங்கம் என்னும் தலைப்பில் ஜூலை 17ம் திகதி சனிக்கிழமை அவர் மோர்னிங் ஸ்டார் செய்திப்பத்திரிகையில் எழுதிய கட்டுரை இது குறித்த முக்கிய கருத்துக்களை உள்ளடக்கியிருந்தது. மேலும் அதே ஆண்டில் நியமிக்கப்பட்ட உள்ளூராட்சி குறித்த தெரிவுக்குழு சார்பிலும், 1947ல் உள்ளூராட்சி அமைச்சரென்ற வகையிலும் திரு. பண்டாரநாயக்க சமஷ்டி முறையின் அவசியத்தை வலியுறுத்தினார்.*

மாத்திரமே சிங்களத்தலைவர்களிற்கு இதைச் செய்ய முடிந்தது. அது இதுகாலவரை உதாசீனம் செய்யப்பட்ட தேசிய இனங்கள் (விசேஷமாகத் தமிழ் தேசிய இனம்) மத்தியில் நீறுபூத்த நெருப்புப் போன்று இருந்து வந்த அதிருப்தி சுயாட்சி குறித்த பிரச்சினைகளை எழுப்பும் வரையிலேயே நீடித்தது. ஆயினும் அரசு இத்தகைய அபாயத்தை எதிர்கொள்ள நேரிடுமென்பதை அன்றைய தலைவர்கள் சிலர் அறிந்திருந்தனர். விசேடமாக அக்காலத்தில் மக்களின் மனங்களைப் பெருமளவுக்கு கவர்ந்திருந்த தலைவராகிய திரு. எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்க இலங்கைக்கு மிகவும் பொருத்தமான அரசியல் முறைமை சமஷ்டியே என்று தெரிவித்திருந்தார். இலங்கை உலகின் ஏனைய அரசுகள் மத்தியில் ஒரு பல்லின மக்கள் வாழும் அரசு என்பதால் அதற்கு மிகவும் பொருத்தமான ஆட்சிமுறை சமஷ்டி என்று அவர் பல சந்தர்ப்பங்களில் தெளிவாக அபிப்பிராயம் தெரிவித்தார். 1926ல் இலங்கையின் சமஷ்டி அரசாங்கம் என்னும் தலைப்பில் ஜூலை 17ம் திகதி சனிக்கிழமை அவர் மோர்னிங் ஸ்டார் செய்திப்பத்திரிகையில் எழுதிய கட்டுரை இது குறித்த முக்கிய கருத்துக்களை உள்ளடக்கியிருந்தது. மேலும் அதே ஆண்டில் நியமிக்கப்பட்ட உள்ளூராட்சி குறித்த தெரிவுக்குழு சார்பிலும், 1947ல் உள்ளூராட்சி அமைச்சரென்ற வகையிலும் திரு. பண்டாரநாயக்க சமஷ்டி முறையின் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும் 1957ல் பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் மூலம் அவர் செய்ய முயன்றதும் பல்லினச் சமூகமொன்றில் அதிகாரப்பகிர்வுகளுடன் கூடிய ஓர் அரசு அமைய வேண்டியது பல்வேறு இன மக்களின் விசுவாசத்தின் அடிப்படையிலேயே என்னும் நம்பிக்கையின் பிரகாரமாகும். இவ்வாறே 1966ல் டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தத்தின் மூலம் திரு. டட்லி சேனநாயக்கவின் மனதிலும் அரசைக்கட்டியெழுப்பும் சரியான மூலோபாயம் சம்பந்தமான கருத்துகள் இருந்தமை தெளிவாகியது. அத்தோடு அக்காலத்தில் தமிழ் தலைவர்கள் சமஷ்டி முறைமையைக் கோராமல், அதற்கு மிகவும் குறைவான அளவில் அதிகாரப்பகிர்வுகளையே கேட்டு நின்றனர் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கதாகும். அக்காலத்திலிருந்த சகல இடதுசாரித்தலைவர்களும் ஓர் இனத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்ட அரசு அமைவதை எதிர்த்து நின்றதோடு, அத்தகைய ஓர் அரசின் எதிர்காலம் குறித்து அபாய அறிவிப்புக்களையும் செய்தனர்.

எப்படியிருந்த போதிலும் சுதந்திரம் கிடைத்து இலங்கை அரசை அமைக்கும் ஆரம்ப முயற்சிகளின் போது சமஷ்டி ஆட்சிமுறை குறித்த எண்ணம் முன்வைக்கப்பட்ட போதிலும் அது உடனடியாகவே நிராகரிக்கப்பட்டது. இத்தகைய கருத்து அடக்கியொடுக்கப்பட்டது மாத்திரமன்றி, ஒரு இனத்தவரின் அபிலாசைகளுக்கு மட்டும் ஏற்றவிதத்தில் அரசு கட்டியெழுப்பப்பட்டதன் மூலம் தீவிர நாசம் விளைவிக்கும் பல்வேறு அனுபவங்களை நாம் வரித்துக்கொண்டோம். அதிகாரப்பேராசை பிடித்த சிங்களத் தலைவர்களும் அவர்களுக்கு அரசியல் தர்க்கவாதம் குறித்து உபதேசம் வழங்கிய புத்திஜீவிகளும் இலங்கை இனம் என்பது சிங்கள இனமாகவே இருக்க வேண்டுமென்றும் சிறுபான்மை இனங்கள் சிங்கள இனத்திற்குக்

கீழ்ப்படிய வேண்டுமென்றும் அவை சிங்கள இனத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டுமென்றும் (Assimilation) பெரிதும் சிந்தித்தனர். ஆயினும் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலம் தொட்டே சிறுபான்மை இனங்கள் தாம் அடிமைப்படவோ, உள்வாங்கப்படுவதற்கோ தயாரில்லையென்பதை வெளிப்படுத்தி வந்துள்ளனர். பல சந்தர்ப்பங்களில் சிங்களத் தலைவர்களும் புத்திஜீவிகளும் இவ்வாறான சிந்தனை மற்றும் நடவடிக்கைகளில் நம்பிக்கை வைப்பதற்கான காரணம் ஐரோப்பிய தேசிய அரசுகள் உருவாகிய முறை சம்பந்தமாக அவர்கள் கொண்டிருந்த விளக்கங்களேயாகும். 14, 15ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் உருவாகிய தேசிய அரசுகள் சமாதான வழிகளில் தோன்றியவை அல்ல. மாறாக அவை இரு நூற்றாண்டு காலத்துக்கு அதிகமான இன ஒழிப்பு, நாட்டைவிட்டு விரட்டுதல் போன்ற தீவிர அடக்குமுறைகளின் பின்னர் பெரும்பான்மை இனத்துக்கு சிறுபான்மை இனங்கள் கீழ்படியும் கட்டாயத்தை ஏற்படுத்தியே இத்தேசிய அரசுகள் உருவாக்கப்பட்டன. பிரிட்டனில் ஆங்கில நாகரீகம் வேல்ஸ் மற்றும் ஸ்கொட்டிஷ் இன மக்கள் மீது பலாத்காரமாகத் திணிக்கப்பட்ட ஒன்றாகும். அதை அவர்கள் சமாதான ரீதியில் விரும்பி ஏற்றுக்கொள்ளவில்லை. இன்னும் இந்த இனங்களைச் சேர்ந்த மக்களுக்கு ஆங்கிலேயர் மீது நல்லெண்ணம் கிடையாது. ஐரிஷ் இன மக்கள் இங்கிலாந்தின் ஆதிபத்தியத்திற்கெதிராக நீண்டகால ஆயுதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். இந்தச் சூழ்நிலைகளில் வேல்ஸுக்கும் ஸ்கொட்லாந்துக்கும் பிரித்தானிய அரசினுள் தனியான பாராளுமன்றங்களைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் ஓரளவிலான சுயாட்சி முறை மூலம் அரசை மீண்டும் சீரமைக்கும் நடவடிக்கைகள் 1990களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


**தேசிய இனம் என்னும் காரணி**

இன்று பல பல்லின அரசுகளில் தேசிய அரசு முறைமைக்குச் சவால் விடுத்து, தம்மையும் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கும் வகையில் அரசு மீண்டும் சீரமைக்கப்பட வேண்டுமென்ற ஏனைய இன மக்களின் கோரிக்கை வலுத்து வருகின்றது. இன்று பல நாடுகளில் சிறுபான்மையின மக்கள் தம்மையும் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கும் ஆட்சிமுறையொன்றை ஏற்படுத்த முடியாவிட்டால், தனிநாட்டுக்கோரிக்கை போன்றவற்றை முன்வைத்துப் பிரிவினைவாத முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கும் நிலை தோன்றியுள்ளது. சிறுபான்மையின மக்களுக்கு ஏற்படும் அநீதிகள் மாத்திரம் இதற்குக் காரணம் அன்று. ஒரு இனமென்று அங்கீகரிக்கப்படக்கூடிய சகல தகுதிகளும் தமக்கு உண்டென்ற உணர்வின் அடிப்படையிலேயே அவர்கள் இந்த மாற்றங்களைக் கோரி நிற்கின்றனர். உதாரணமாக இன்று இந்தியாவில் பஞ்சாப் சீக்கிய இன மக்களின் பிரிவினைவாத இயக்கம் மற்றும் கனடாவின் கியூபெக் மாநிலப் பிரிவினைவாத இயக்கம் என்பவை மேலெழுவதற்குக்

பிரிட்டனில் ஆங்கில நாகரீகம் வேல்ஸ் மற்றும் ஸ்கொட்டிஷ் இன மக்கள் மீது பலாத்காரமாகத் திணிக்கப்பட்ட ஒன்றாகும். அதை அவர்கள் சமாதான ரீதியில் விரும்பி ஏற்றுக்கொள்ள வில்லை. இன்னும் இந்த இனங்களைச் சேர்ந்த மக்களுக்கு ஆங்கிலேயர் மீது நல்லெண்ணம் கிடையாது. ஐரிஷ் இன மக்கள் இங்கிலாந்தின் ஆதிபத்தியத்திற்க்கு எதிராக நீண்டகால ஆயுதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

காரணம் மத்திய அரசாங்கத்தினால் ஏற்பட்ட அநியாயங்கள் அல்ல. மாறாக அவர்கள் மத்தியில் உருவாகிய தேசிய இனம் சம்பந்தமான உணர்வுகள் காரணமாகவே இது இடம்பெற்றது. இத்தகைய உணர்வுகள் இன்று தேசிய இனங்கள் மத்தியில் தோன்றுவதைத் தடுக்க முடியாது. அவ்வாறு தடுப்பதும் நியாயமல்ல. இன்று உலகில் 205 அரசுகள் உள்ளன. அவற்றினுள் 6000 ற்கும் அதிகமான இனக்குழுக்கள் வசிப்பதாக மானுட வரலாற்றியல் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இதன் பிரகாரம் இன்று இந்த அரசுகள் எதிர்கொள்ளும் பிரதான சவால் இந்தப்பல்லினக் குழுக்களின் பொதுவான அபிப்பிராயத்தின்படி அரசைக் கட்டியெழுப்புவது எவ்வாறு என்பதாகும். இச்சவாலை வெற்றி கொள்ளும் பிரதான வழி அவர்களின் இனத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் வகையில் அதிகாரத்தைப் பகிர்வு செய்வதும், அவர்களை அதிகாரத்தில் பங்குதாரர் ஆக்குவதுமாகும். இதற்கு மிகவும் பொருத்தமான வழிமுறை சமஷ்டி வழிமுறையென்பது எனது நம்பிக்கையாகும்.

சமஷ்டி முறைமையென்பது ஒரு நாட்டில் வாழும் பல்வேறு இனங்களின் சமமான அபிவிருத்தியை உறுதி செய்யும் முறைமையாகும். உலகில் தற்போது நடைமுறையிலிருப்பது பிரதானமாக ஒற்றையாட்சி அல்லது சமஷ்டியாட்சி என்பதை நாம் அறிவோம். ஒற்றையாட்சி என்றால் என்ன? கிளேயர் பாலி கூறியதற்கமைய "அதியுயர் அரசியலமைப்பு அதிகாரத்தைப் பிரயோகிக்கக் கூடிய ஒரு மத்திய அதிகாரசபையின் கீழ் அரசாங்க அதிகாரங்களும் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பின் அத்தகைய ஓர் அரசியலமைப்பை ஒற்றையாட்சி அரசியலமைப்பு'' என்று அழைக்கலாம். பேராசிரியர் ஸ்ட்ரோங் கூறுவதன் பிரகாரம் "ஒற்றையாட்சியென்பது அரசியலமைப்பு அதிகாரம் ஒரு தனி மத்திய சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் அரசு'' ஆகும். இதன் பிரகாரம் ஒற்றையாட்சி அரசியலமைப்பினுள் சட்டமியற்றுதல் ஒரு நிறுவனத்தின் மூலம் மாத்திரமே இடம்பெறுகின்றது. 1972ம் ஆண்டின் முதலாவது குடியரசு அரசியலமைப்பில் ஒற்றையாட்சிமுறை அறிமுகம்




செய்யப்பட்டது இவ்வகையிலேயே ஆகும். அப்படியாயின் தேசிய அரசுப்பேரவை ஒருபோதும் அரசியலமைப்பு அதிகாரத்தை எந்த வகையிலும் கைவிடமாட்டாது. அதைக்கையளிக்கவும் மாட்டாது. உப-சட்டங்களை ஆக்கும் அதிகாரம் தவிர அரசியலமைப்பு அதிகாரம் கொண்ட ஏனைய அதிகாரசபை எதனையும் நிறுவவும் மாட்டாது. (உறுப்புரை 45 - 1) இவ்வாறே 1978ம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியலமைப்பில் ஒற்றையாட்சியின் தன்மை இவ்வாறு வெளிப்படுகின்றது. "பாராளுமன்றம் தனது அரசியலமைப்பு அதிகாரத்தைக் கைவிடக்கூடாது. எந்த வகையிலும் கையளிக்கவும் கூடாது. ஏதாவது அரசியலமைப்பு அதிகாரங்கொண்ட எந்த அதிகாரசபையையும் பாராளுமன்றம் நிறுவக்கூடாது." உறுப்புரை 76 - 1) இத்தகைய ஒற்றையாட்சித்தன்மைக்கு ஏற்றவகையில் வெற்றிகரமான அதிகாரப்பகிர்வு எதையுமே செய்ய முடியாது. சட்டமியற்றுவதற்கு வேறொரு நிறுவனத்தை உருவாக்க முடியாது. பெரும்பான்மையினரின் அதிகாரம் நிலவும் பாராளுமன்றத்தில் ஏற்படுத்தப்படும் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்குச் சிறுபான்மையின மக்கள் அடங்கி, கீழ் படிந்து செயற்படுதல் வேண்டும். தமது தேசிய இனங்குறித்த உணர்வுகளுக்கு இடமளிக்காது, தமது விருப்பப்படி சுயாட்சி மூலம் தமது சொந்தப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய முடியாத வகையில், அரசியல் தீர்மானங்களையும் மேற்கொள்ள முடியாத வகையில் அவர்கள் கஷ்டங்களை அனுபவிக்க நேரிடுகிறது. இது தேசிய இன உணர்வு மேலோங்கும் ஏனைய இனங்களை அரசியலமைப்பு மூலம் அடக்கியொடுக்கும் நடவடிக்கையாகும். தேசிய அரசுகள் இன்று ஆயுதப் போராட்டங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது இது காரணமாகவே ஆகும்.

அப்படியாயின் செய்யப்பட வேண்டியது என்ன? அரசினுள் வாழும் ஏனைய இன மக்களின் தேசிய இனத்துவம் மற்றும் சுயாட்சி குறித்த கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, அரசை மீண்டும் சீரமைப்பதே இதுவாகும். ஒற்றையாட்சி முறைமைக்குப்பதிலாக, சமஷ்டி ஆட்சி முறைமை அவசியப்படுவது இக்காரணத்தினாலேயே ஆகும். சமஷ்டி முறைமையென்பது அதிகாரம் மத்திய அரசிற்கும், மாகாண அரசாங்கத்திற்குமிடையில் பகிர்வு செய்யப்படும் முறைமையாகும். அதாவது மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கமும் பரஸ்பரம் கூட்டிணைப்பாளர்களாக விளங்கும் முறைமையாகும். ஒன்றுக்கொன்று அடிமைப்படுவதல்ல. சமஷ்டி அமைப்பினுள் ஆட்சி முறைமைகள் சில உண்டு. ஒன்று கலப்பு முறையாகும் இங்கு சமஷ்டி அம்சங்களும் ஒற்றையாட்சி அம்சங்களும் கலந்திருப்பது இதன் விசேட தன்மையாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், அது ஒற்றையாட்சிக்கும் சமஷ்டி ஆட்சிக்கும் இடைப்பட்ட ஒரு

**பெரும்பான்மையினரின் அதிகாரம் நிலவும் பாராளுமன்றத்தில் ஏற்படுத்தப்படும் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்குச் சிறுபான்மையின மக்கள் அடங்கி, கீழ் படிந்து செயற்படுதல் வேண்டும். தமது தேசிய இனங்குறித்த உணர்வுகளுக்கு இடமளிக்காது, தமது விருப்பப்படி சுயாட்சி மூலம் தமது சொந்தப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய முடியாத வகையில், அரசியல் தீர்மானங்களையும் மேற்கொள்ள முடியாத வகையில் அவர்கள் கஷ்டங்களை அனுபவிக்க நேரிடுகிறது.**


நிலையாகும். இன்று இந்தியாவில் செயற்படுவது அத்தகைய ஓர் ஆட்சிமுறையாகும். இதற்கு மேலதிகமாக ஒற்றையாட்சி அம்சங்கள் இல்லாமல் மிகவும் பலம்வாய்ந்த முறையில் அதிகாரப்பகிர்வு இடம்பெறும் சமஷ்டி ஆட்சிமுறைகளும் உள்ளன. அமெரிக்க ஐக்கிய ராஜ்ஜியம், கனடா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா மற்றும் நைஜீரியா போன்ற நாடுகள் சமஷ்டி அரசுகளுக்கு உதாரணங்களாகும். இவை உயர் சமஷ்டி அமைப்புகளென்று அழைக்கப்படுகின்றன. இந்த நாடகளில் மத்திய அரசாங்கத்தின் அதிகாரமும் பிராந்திய அரசாங்கங்களின் அதிகாரமும் மிகவும் பலம் பொருந்தியவை ஆகும். இதற்கும் மேலதிகமாக சமச்சீரற்ற முறையில் அதிகாரப்பகிர்வு காணப்படும் சமஷ்டி அரசுகளும் உள்ளன. இதன் கருத்து சில பிராந்தியங்களுக்கு ஏனையவற்றைவிடக் கூடுதலான அதிகாரங்களை வழங்குவதாகும். இத்தாலி, பெல்ஜியம், ஸ்பெயின், அவுஸ்திரியா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் இத்தகைய சமஷ்டி முறைகளைக் காணலாம். இத்தாலியில் தென்பிராந்தியமாகிய 'டிரோல்' மக்கள் ஜெர்மன் மொழியைப் பேசுவோராவர். அது முற்காலத்தில் ஜெர்மனியுடன் தொடர்புற்றிருந்தது. ஆயினும் இத்தாலியின் பிரதான மொழி இத்தாலி மொழியாகும். இங்கு தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவது ரோமாபுரியிலாகும். ஆயினும் டிரோல் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை உள்ளிட்ட அதிகாரப்பகிர்வு வழங்கப்பட்டுள்ளது. ஸ்பெயினிலும் இத்தகைய நிலை காணப்படுகின்றது. இங்கு 'பாஸ்கு' இன மக்கள் நீண்டகாலமாகவே பிரிந்து சென்று செயற்படும் சுயநிர்ணய உரிமைத்தகுதிகள் தமக்கு உண்டென்று கூறி பிரிவினைவாத இயக்கத்தை நடத்தி வந்தனர். ஆயினும் சமீபத்தில் பிரிவினைக்கு இடமளிக்காது சுயநிர்ணய உரிமையுள்ள மக்களாக அங்கீகரிக்கப்படுள்ளமை சுயாட்சி குறித்து இருதரப்பினரிடையிலும் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.



ஆயினும் பிரிவினைவாதிகளாக இருந்தோரில் சில பிரிவினர் தொடர்ந்தும் தனிநாடுகோரி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் மக்களில் பெரும்பான்மையானோர் இதற்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். பெரும்பான்மையான பாஸ்கு இன மக்கள் ஐக்கிய ஸ்பெயின் தேசத்திற்குள், சுயாட்சி அதிகாரம் கொண்ட மக்களாக வாழுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். ஸ்பெயின் அரசியலமைப்பின் இரண்டாவது உறுப்புரையில் இந்த உரிமைக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

**இந்தியா எதிர்நோக்கும் சவால்**

இந்தியாவிலும் இதற்கான உதாரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்தியாவில் காலத்துக்குக் காலம் தலைதூக்கும் பிரிவினைவாத இயக்கங்களைக் கட்டுப்படுத்தும் சக்தி இருப்பது அரசியலமைப்பில் அதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்றிருத்தல் காரணமாகவேயாகும். இந்தியாவில் 100 கோடி மக்கள் 27 பிராந்தியங்களில் அல்லது மாநிலங்களில் வாழுகின்றனர். முழு ஜனத்தொகையில் 87.2% ஆனோர் இந்துக்களாவர். முஸ்லிம்கள் 11% ஆவர். ஆயினும் இந்த அரசியலமைப்பு ஒரு மதச்சார்பற்ற அரசியலமைப்பாக விளங்குமாறு




அன்றிருந்த தலைவர்கள் வகை செய்தனர். 1950 முதல் 1962 வரை சென்னையில் நிலவிய பிரிவினைவாத இயக்கம் 1962ல் கூடுதல் அதிகாரங்களை வழங்கியதன் மூலம் இல்லாமற் செய்யப்பட்டது.

இருதசாப்தகாலத்திற்கு மேலாக நிலவிவந்த ஆயுதந்தரித்த மிஸோராம் பிரிவினைவாத இயக்கப் பிரச்சினைக்கு 1987ல் உடன்படிக்கை ஒன்றின் மூலம் தீர்வு காணப்பட்டது. மேற்கு வங்காள கூர்கா பிரிவினைவாதப் பிரச்சினை 1988ல் டார்ஜீலிங் மலைப்பிரதேசத்திற்கு பிரதேச ஆட்சியமைப்பொன்றை வழங்குவதன் மூலம் தீர்த்து வைக்கப்பட்டது. பஞ்சாப் ஆயுதப் பிரிவினைவாத இயக்கத்தைத் தோல்வியுறச் செய்வதற்காக இராணுவ நடவடிக்கை எடுத்த போதிலும், அதற்கு இறுதித்தீர்வு கண்டது, அரசியலமைப்பு ரீதியாக கூடுதலான அதிகாரங்களைப் பஞ்சாப் மாநிலத்துக்கு வழங்கியதன் மூலமாகும்.

பிரிந்திருந்த அரசுகள் அல்லது ஆட்சியமைப்புகளை ஒன்றுசேர்க்கும் வகையில் சமஷ்டி முறைமைகள் ஏற்படுத்தப்பட்டதாகப் பலர் எண்ணுகின்றனர். அது சரியான ஒரு கருத்து அல்ல. சமஷ்டி முறைமையினுள் உண்மையில் சம்பவித்திருப்பது அரசினுள் உள்ள பல இன மக்கள் பிரிந்து செல்வதற்குப் பதிலாக அவர்கள் ஐக்கியப்படுவதாகும். உலக வரலாற்றில் இதற்குப் பல உதாரணங்களைக் காணலாம். இன்று உலகில் சுமார் நூற்றுக்கு அதிகமான நாடுகளில் சமஷ்டி ஆட்சி முறைமை பரிசீலிக்கப்படுகின்றது. இதில் 30% ஆன நாடுகளில் சுதந்திர அரசுகளினுள் பிரிவினைவாதப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுமுகமாக சமஷ்டி முறைமைகள் மூலமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பிரிட்டனில் ஏற்பட்ட ஸ்கொட்டிஷ் பிரிவினைவாத இயக்கப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுமுகமாக பிரித்தானியத் தொழிற்கட்சி ஸ்கொட்லாந்துக்குத் தனியான பாராளுமன்றத்தை வழங்கும் ஏற்பாடுகளைச் செய்தது. கடந்த இரு பாராளுமன்றத் தேர்தல்களில் பிரிவினைவாத ஸ்கொட்லாந்து தேசியக் கட்சிக்கு 30-35% வாக்குகள் கிடைத்தன. ஆயினும் இப்பாராளுமன்றம் நிறுவப்பட்ட பின்னர் இக்கட்சியின் செல்வாக்கு மிகவும் பலவீனமான நிலைக்குச் சென்றுள்ளது.

இப்பொழுது பெல்ஜிய உதாரணத்தை நோக்குவோம். இந்த நாட்டில் மூன்று மொழிகளைப் பிரதானமாகப் பேசும் மக்கள் வாழுகின்றனர். அவை ஜொ்மன், பிரெஞ்சு மற்றும் ஒல்லாந்து மொழிகளாகும். ஒல்லாந்து மற்றும் பிரெஞ்சுமொழி பேசுவோர் முறையே 6 மில்லியன் மற்றும் 5 மில்லியன் மக்களாவர். ஜொ்மன் மொழிபேசும் மக்கள் பத்து இலட்சத்திற்கும் குறைவான

தொகையினராகவே இருந்தனர். ஆயினும் வேல் மற்றும் பெலமின் மக்கள் மத்தியில் பாரிய பிரிவினைவாதப் போராட்டம் இடம்பெற்றதோடு, அதற்குத்தீர்வாக 1970ல் அறிமுகம் செய்யப்பட்ட சமஷ்டி முறைமையினால் ஒற்றையாட்சிமுறை மாற்றியமைக்கப்பட்டது. அதிகாரத்தில் பங்குதாரிகளைக் கொண்ட வெற்றிகரமான அரசு என்ற வகையில் பெல்ஜியன் சமஷ்டி முறைமை ஓர் உதாரணமாக விளங்குகிறது.



**நைஜீரியா சென்ற பாதை**

நைஜீரியாவும் ஒற்றையாட்சி முறையிலிருந்து சமஷ்டி முறைமைக்கு நிலைமாற்றமடைந்த ஓர் அரசாகும். 1960ல் சுதந்திரம் பெற்ற நைஜீரியா அந்த நேரத்தில் நிறுவிய ஒற்றையாட்சி முறைமை பல சந்தர்ப்பங்களில் சமஷ்டி முறைமையை நோக்கி மாற்றமடைந்துள்ளது. முதலில் ஐந்து பிராந்தியங்களுடன் ஆரம்பித்த அதிகாரப்பகிர்வு முறைமை இப்பொழுது 21 பிராந்தியங்களை ஏற்படுத்துவதில் முடிவுற்றுள்ளது. இவ்வாறாக, எந்தப்பிராந்தியமுமே பிரிந்து சென்று தனி அரசு ஒன்றைத் தாபிக்கவில்லை. பிலிப்பீன்ஸில் 24 வருட காலமாக இடம்பெற்று வந்த பிரிவிவைாத இயக்கம் இப்போது செயலற்ற நிலைக்குத் தள்ளப்பட்டதும் அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகள் காரணமாகவேயாகும். தென்பிராந்தியத் தீவாகிய மின்டனாவோவில் முஸ்லிம் பிரிவினைவாத இயக்கத்தைக்கட்டுப்படுத்தும் நோக்கில் 1991ல் மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்று இடம்பெற்றது. சுயாட்சியொன்று வழங்கப்பட்டது. சுயாட்சி கிட்டிய பின்னரும் பிரிவினைவாத இயக்கத்தினால் ஏற்பட்ட அபிப்பிராய பேதங்கள் காரணமாக மோதல்கள் ஏற்பட்ட போதிலும், இன்று வரையில் அந்த இயக்கம் செயலற்றதாகவே உள்ளது.

இதன் பிரகாரம் நோக்கும் போது சமஷ்டி முறைமை பிரிந்து தனியாகச் செல்லவிருந்த இனங்களை ஒன்று சேர்க்கும் வகையிலேயே செயலாற்றியுள்ளது. அது உளவியல் ரீதியாகவும், பூகோளவியல் ரீதியாகவும் ஐக்கியப்படுத்துவதாகும். ஏதாவதொரு மக்களினம் பிரிந்துபோக முடிவுசெய்வது ஏனைய இனத்திடமிருந்து அல்லது அரசிடமிருந்து கவனிப்பு இல்லாத வேளையிலாகும். இல்லாவிடில் தாமும் ஒரு தேசிய இனமென்ற உணர்வு அவர்களுள் தீவிரமாக ஏற்படும் சந்தர்ப்பத்திலாகும். ஓர் இனத்திற்கு அநியாயங்கள் இடம்பெறுகையில் இன உணர்வு மேலோங்கும். இந்த உணர்வு


**சமஷ்டியென்பது சக்திமிக்க அரசொன்றைக் கட்டியெழுப்பும் சங்கிலியாகும்.**

*எல்ரீரீஈ அமைப்பின் மீதான தடை அகற்றப்பட்ட போது அன்று இவ்வாறே மக்களைப் பயமுறுத்தினார்கள். இப்பொழுது அது குறித்து எவருமே பேசுவதில்லை. மக்களுக்கு அது குறித்து இப்பொழுது எதுவித பயமும் இல்லை. தடை செய்தது கூடத்தவறான நடவடிக்கையென்று அவர்கள் இப்பொழுது உணர்கின்றனர்.*

இறுதியில் அரசுக்கெதிரான வன்செயலாக உருவெடுக்கும். இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னர் எமக்குக்கிட்டிய அனுபவம் இத்தகைய ஒன்றாகும். இதன் பிரகாரம் பல்லின சமுதாயமாகிய எமக்கு மேலும் ஐரோப்பிய தேசிய அரசு மாதிரியை முன்னெடுத்துச் செல்லுதல் இயலாது. இந்த அரசின் பயணம் முடிந்து விட்டது. நாட்டினுள் ஏனைய இனத்தவர்களும் வாழுகின்றார்கள் என்பதை இப்பொழுதாவது நாம் அங்கீகரிக்க வேண்டும். இந்த இனங்களுக்கு வரலாறும், கலாசாரமும், பாரம்பரியத்தாயகம் என்பவை உண்டு என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களின் மரபு ரீதியான அறிவு மற்றும் கலாசாரம் என்பவற்றிலிருந்து ஏனைய மக்கட் பிரிவினரும் போஷிக்கப்பட்டுள்ளனரென்பதையும் அறிந்து கொள்ளுதல் வேண்டும். எமது தேசிய இனங்கள் ஐக்கியமாக வாழ்வதற்குரிய இயலுமையைப் பெற்றுக் கொள்வது இத்தகைய அறிவு மற்றும் கலாசாரம் பரஸ்பர ரீதியில் போஷிக்கப்பட்டதாலேயே ஆகும். ஆகவே ஓர் இனம் தாமும் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று விடுக்கும் கோரிக்கையை நிராகரிப்பது துஷ்டத்தனமானதும் பாவகரமானதென்றும் நான் நினைக்கிறேன். பெரும்பான்மையினரான பௌத்த மக்கள் கடந்த காலங்களில் இடம்பெற்றது போன்று தீவிரவாத அரசியல்வாதிகளின் கதையை நம்பி ஏமாந்து இந்தத் துஷ்ட, பாவகரமான காரியங்களில் பங்குகொள்ள மாட்டார்களென்பது எனது நம்பிக்கையாகும்.

இறுதியாக, இன்று எமது பொறுப்புக்களைச் சரியான முறையில் புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டிய காலம் வந்துள்ளது. சமஷ்டியென்பது சக்திமிக்க அரசொன்றைக் கட்டியெழுப்பும் சங்கிலியாகும். தேசிய இனங்களைக் கட்டியெழுப்புவதன் மூலம் மாத்திரமே அரசொன்றைக் கட்டியெழுப்புவது சாத்தியமாகும். இனங்களைக் கட்டியெழுப






புவதென்பது அரசினுள் இனங்கள் என்ற வகையில் உரிமைகள் மற்றும் அனுகூலங் களை சகல இன மக்களுக்கும் பெற்றுக் கொடுக்கும் முறைமையை ஏற்படுத்துவதாகும். அது அரசின் பொறுப்பாகும். இதற்காக முதலில் தேசிய இனமாக அங்கீகாரமும் அதிகாரப்பகிர்வும் அதிகாரத்தில் பங்குதாரர் ஆக்கிக்கொள்வதும் இடம்பெறுதல் வேண்டும். அதற்காக மரபுரீதியான வசிப்பிடங்களில் அந்த இனத்திற்கு சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். சமஷ்டி முறைமை எமக்கு உதவிகரமாக அமைவது இந்தவிடயத்திலேயே ஆகும். சகல இனங்களினதும் பொதுவான இணக்கப்பாடுள்ள அரசு ஒன்றைக் கட்டியெழுப்புவது, அரசியலை ஜனநாயகப்படுத்துவது, இனங்களின் பிரதேச சுயாட்சி குறித்த அபிலாஷைகளை நிறைவேற்றுவது மற்றும் சமநிலையான பிரதேச அபிவிருத்தியை ஏற்படுத்துவது என்பவை ஒரு சமஷ்டிச் சூழமைவில் சாத்தியமான விடயங்களாகும்.

**தேவையற்ற பயம் வேண்டாம்**

இதன் பிரகாரம், எப்படிப் பார்த்தாலும் சமஷ்டி முறைமை எமது நாட்டிற்கு மிகவும் பொருத்தமான, வெற்றிகரமான முறைமையாக அமையுமென்பது மிகவும் தெளிவாகின்றது. மக்கள் இது குறித்து எந்தவிதமான தேவையற்ற பீதிகளையும் கொள்ள வேண்டிய அவசியமில்லை. தீவிரவாத அரசியல்வாதிகளும் ஏனைய இனவாதிகளும் இது குறித்து மக்கள் மத்தியில் பரப்பி வந்த தவறான கருத்துக்கள் குறித்து இப்பொழுது சரியான விளக்கம் ஏற்பட்டிருக்குமென்று நான் நம்புகின்றேன். இன்னுமொரு புறத்தில் சமஷ்டி முறைமை எமது போன்ற சிறிய நாட்டிற்குப் பொருந்தாது என்றும் சிலர் கூறி வருகின்றனர். இலங்கையைவிடச் சிறியதான சுவிட்சர்லாந்து மிகவும் வெற்றிகரமான சமஷ்டி அமைப்பைக் கொண்ட நாடாகும். அங்குள்ள சில கன்டன்களில் (பிராந்தியங்கள்) ஜனத்தொகை 20,000 மக்களுக்கும் குறைவானதாகும். அரசு சிறிதாகவோ அல்லது பெரிதாகவோ இருப்பது இத்தகைய ஆட்சிக்கு ஒரு பிரச்சினையே அல்ல. அரசினுள் வாழும் சகல இனங்களுக்கும் சமமான அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய வகையில் அந்த ஆட்சிமுறை ஏற்பாடுகளைச் செய்யக்கூடிய நிலையில் உள்ளதா என்பதே முக்கியமானதாகும்.

சுதந்திரம் கிடைத்த பின்னர் கடந்த 54 வருட காலப்பகுதியில் நாம் கவலைகள், பயங்கரவாதம், வறுமை, லஞ்சம், ஊழல் மற்றும் பல்வேறு உளவியல் பாதிப்புக்கள் மத்தியிலேயே வாழ்ந்து வந்துள்ளோம். இது நிகழ்ந்தது ஒற்றையாட்சி முறைமையின் கீழாகும். தொடர்ந்தும் இந்த நரகத்தில் வாழ்க்கை நடத்துவதா அல்லது சமஷ்டி அடிப்படையிலான நீதியான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பி, மேற்கூறிய துன்பம் நிறைந்த பிரச்சினைகளிலிருந்து விடுதலை பெற்று வாழ்வதா என்பதைத் தீர்மானிக்கும் காலம் வந்துள்ளது. சமஷ்டி அமைப்பு ஒரு பூதம் என்று ஜனங்களை இனிமேலும் பயமுறுத்துவது சாத்தியப்படாது. எல்ரீரீஈ அமைப்பின் மீதான தடை அகற்றப்பட்ட போது அன்று இவ்வாறே மக்களைப் பயமுறுத்தினார்கள். இப்பொழுது அது குறித்து எவருமே பேசுவதில்லை. மக்களுக்கு அது குறித்து இப்பொழுது எதுவித பயமும் இல்லை. தடை செய்தது கூடத்தவறான நடவடிக்கையென்று அவர்கள் இப்பொழுது உணர்கின்றனர். சமஷ்டி முறைமை பற்றியும் அவர்கள் எதிர்காலத்தில் இவ்வாறே உணர்வர் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. ஆயினும் எதிர்காலம் என்பது நிகழ்காலத்தில் வீண்விரயமாகிச் செல்வதை நாம் அனுமதிக்கக் கூடாது. ■


# தேசிய இன முரண்பாடுகளுக்கு சமஷ்டி முறை மூலம் தீர்வு

பி.எம். அபூபக்கர்
விரிவுரையாளர்
B.A.(Hons) M.A. (Pera) Dip-in-Edu
அரசியல் விஞ்ஞானத்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்.

புத்திஜீவிகளாலும் அரசறிவியல் அறிஞர்களாலும் அண்மைக் காலங்களில் முக்கியமாகப் பேசப்படுவது 'சமஷ்டி' என்ற பதமாகும். நடைமுறை உலகில் இடம்பெற்ற மனித உரிமைப் போராட்டங்களும் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களும் சமூக, பொருளாதார வளங்களை சமமாகப் பெறுவதற்கான வன்முறைகளுக்கும் ஜனநாயகப் பண்புகளை எற்படுத்துவதற்கான சிறந்ததொரு அடித்தளத்திற்கும் உறுதியான தீர்வினை பெறுவது சமஷ்டியாட்சி அல்லது கூட்டாட்சி முறையின் மூலம் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.

சமஷ்டி என்பதைக் குறிக்கும் ஆங்கிலப் பதமான "Pederalism" என்பது லத்தின் மொழிச்சொல்லான 'Peodus' என்பதில் இருந்து தோன்றியதாகும். இந்த 'Peodus' என்பது நட்பு நாடுகளுக்குடையிலான ஒப்பந்தம் எனவும் அரசறிவியல் ஆய்வாளர்களால் பொருள் கொள்ளப்படுகின்றது.





**சமஷ்டி என்றால் என்ன**

இந்த வகையில் சமஷ்டி என்றால் என்ன? என்பதற்கு கே.ஸி.வெயர் சிறந்ததொரு வரைவிலக்கணத்தை முன் வைக்கின்றார். தேசிய ரீதியாகவும், பிராந்திய ரீதியாகவும் அதிகாரங்களைப் பங்கீடு செய்து சமஷ்டியில் இணைந்த ஒவ்வொரு அலகும் சமமான முறையில் தொடர்புகளைப் பேணிக்கொள்கிற அதேவேளை சுதந்திரமாகக் தமது எல்லைக்குள் செயற்படும் ஒரு அரசாங்க முறையென குறிப்பிடுகின்றார்.

எனவே அதிகாரங்களைப் பங்கீடு செய்வதன் மூலமே சமஷ்டி முறையொன்றினை உருவாக்கிக்கொள்ள முடியும் என்பது வெயரின் கருத்தில் இருந்து அவதானிக்க முடிகிறது.

எனவே சமஷ்டி அரசாங்கமுறை அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்டதாகும். (Decentralized Government) மத்திய அரசாங்கம் ஒன்றின் கீழ் அரசியலமைப்புக்குட்பட்ட விதத்தில் சிறிய மாநிலங்களோ பிராந்திய சபைகளோ தமது சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் இழந்துவிடாத வகையில் சில பொதுவான நன்மைகளை கருத்தில் கொண்டு செயற்படும் சிறந்த அரசாங்க முறையாகும்

அந்த வகையில் சமஷ்டி அரசாங்க முறையில் மத்திய-மாநில அரசாங்கங்கள் நாட்டின் இறைமையைத் தம்மிடையே பகிர்ந்து கொள்ளுதல் முக்கியமானதாகும். இதனை (Confederation) நாடுகளின் கூட்டம் என்பதன் வளர்ச்சிக்கட்டமாகவே விளங்குகின்றது. 1789ல் ஐக்கிய அமெரிக்காவின் கூட்டாட்சி அரசியல் யாப்பு உருவாக்கப்படுவதற்கு முன்னர் காணப்பட்ட பதின்மூன்று அரசுகளின் நிர்வாகம் மற்றும் 1874க்கு முன்னர் சுவிற்சலாந்தில் காணப்பட்ட அரசாங்க முறையும் இதற்கு சிறந்த உதாரணங்களாகும். உண்மையில் எந்தவொரு அரசியல் மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் நாட்டின் இறைமையைத் தமக்குள் பகிர்ந்து கொள்வதன் மூலம் ஒன்றை மற்றையது கட்டுப்படுத்தாமல் அவற்றுக்கென அரசியல் யாப்பில் வரையறுக்கப்பட்டிருக்கும் எல்லைக்குள் சுதந்திரமாக இயங்கும் தன்மையை சமஷ்டி அரசாங்க முறையெனக் கூறுவது பொருத்தமானதாகும்.

எனவே கே.ஸி.வெயர் சமஷ்டி அரசாங்க மாதிரி பற்றி தான்

மேற்கொண்ட ஆய்வுகளில் ஒரு முறையான சமஷ்டிக்கான பண்புகளையும் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். அதிகாரப் பங்கீடு எழுதப்பட்ட உறுதியான அரசியல் யாப்பு நெகிழாத அரசியல் யாப்பு, விசேட நீதிமன்றம், இரட்டைத் தன்மை அரசியல் பிரதிநிதித்துவம், இரண்டாம் மன்றம் என்பனவாகும். இப்பண்புகளை சமஷ்டி அரசாங்க முறையினைப் பின்பற்றும் நாடுகள் தமது சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரப் பண்புகளுக்கு ஏற்ப பின்பற்றுகின்றது. உதாரணமாக ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஜெர்மனி,அவுஸ்திரேலியா, இந்தியா, சுவிற்சலாந்து போன்ற நாடுகள் சமஷ்டி அரசாங்க முறை நிலவும் நாடுகளாகும். இந்த நாடுகளில் நாட்டின் பொதுவான விடயங்களைக் கவனிக்கவென மத்தியரசும் உள்நாட்டு அல்லது பிரதேச நலன்களை பாதுகாக்கவும் அபிவிருத்தி செய்யவும் பல மாநில அரசுகளும் அமைக்கப்பட்டுள்ளன. சமஷ்டி நாடுகளில் மூன்று வகையான அதிகாரப் பட்டியல் காணப்படுகிறது.

அதாவது மத்தியரசுக்கான அதிகாரப் பட்டியல், மாநில அரசுகளுக்கான அதிகாரப் பட்டியல், எஞ்சிய அதிகாரப் பட்டியல் என்பனவாகும். அந்த வகையில் உலகில் சிறந்த சமஷ்டி முறையென வர்ணிக்கப்படும் ஐக்கிய அமெரிக்காவின் மத்திய-மாநில அரசுகளுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரம் போக எஞ்சிய அதிகாரங்கள் மாநில அரசுக்கே வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அமெரிக்காவின் மாநிலங்கள் தமது தனித்துவம்

**அதிகாரப் பங்கீடு எழுதப்பட்ட உறுதியான அரசியல் யாப்பு நெகிழாத அரசியல் யாப்பு, விசேட நீதிமன்றம், இரட்டைத் தன்மை அரசியல் பிரதிநிதித்துவம், இரண்டாம் மன்றம் என்பனவாகும். இப்பண்புகளை சமஷ்டி அரசாங்க முறையினைப் பின்பற்றும் நாடுகள் தமது சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரப் பண்புகளுக்கு ஏற்ப பின்பற்றுகின்றன.**

கலாசாரம் என்பவற்றைப் பேணும் வகையில் கூடுதலான அதிகாரங்களைப் பெற்று இருக்கிறது. இதேபோன்று ஜெர்மனின் சமஷ்டி முறையில் சமத்துவமான அதிகாரப் பங்கீடு காணப்படுகிறது .மத்தியரசிற்கும் மாநிலங்களுக்கும் அதிகாரம் பகிரப்பட்டு எஞ்சிய அதிகாரம் மத்திக்கும் -மாநிலத்திற்கும் சமமாக வழங்கியிருப்பது உலகில் சமத்துவமான சமஷ்டி முறைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வாறு இந்தியாவில் மத்திய மாநில அரசுகளுக்கிடையில் அதிகாரம் பங்கிடப்பட்டு எஞ்சிய அதிகாரம் மத்தியரசிற்கே வழங்கப்பட்டுள்ளது. இதனால் மத்தியரசே சட்டம், நிர்வாகம், நீதி போன்ற எல்லாத் துறைகளிலும் பலம்பொருந்தியதாக காணப்படுகிறது. இந்தியாவில் ஒற்றையாட்சியினை பிரதிபலிக்கும் வகையில் அமையப் பெற்றதற்கான காரணம் இந்தியாவின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளை கருத்திற் கொண்டும் இந்தியாவின் கடந்தகால பிரச்சினைகளில் கிடைத்த எச்சரிக்கைகளில் இந்த நாட்டின் இனவாத, பிரிவினைவாத, மனோபாவம் சர்வதேச நெருக்கடிகளின் காரணமாகவும் அங்கு நிலவும் பல்வேறுபட்ட இன, மத, மொழி, சாதி, பண்பாட்டு, கலாசாரங்களுக்கேற்பவும் மத்தியரசு பலம் கொண்டதொரு சமஷ்டி முறையினை ஏற்படுத்தியுள்ளது எனலாம். இதேபோன்று கனடாவின் சமஷ்டியில் மத்தியரசே இந்தியாவைப் போன்று பலம் கொண்டதாகக் காணப்படுகின்றது

**கனடா**

கனடாவை நாம் எடுத்து நோக்கும்போது அங்கு இன முரண்பாடுகள் மட்டுமல்ல உண்மையான வேறு சில பிரச்சினைகளும் காணப்பட்டது. குறிப்பாக நியுபவுண்ட்லாந்தில் உள்ளவர்களுக்கும் பிரிட்டிஷ் கொலம்பியாவுக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன. இவை

**கியூபெக் மாகாணத்திற்குள் தமது மொழி, கலாசாரம் என்பவற்றைப் பேணிப் பாதுகாக்கும் முக்கிய கடமைப்பாட்டினை கியூபெக் இன்றும் கொண்டிருக்கிறது.**

அவர்களின் சிறப்பியல்புகள் என்றும் அவை அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் கருதியே சமஷ்டி முறையினை அவர்கள் அறிமுகப்படுத்தினர். கலாசாரம், அடையாளம், தனித்துவம் என்பன பாதுகாக்கப்படுவதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பதனால் தான் பிரான்ஸிய செல்வாக்குள்ள கியுபெக் மாகாணத்திற்கும் சிறப்பான இடம் அளிக்கப்பட வேண்டுமென அவர்கள் கூறுகின்றனர். அரசியல் யாப்பில் இதை உறுதிப்படுத்த சில சரத்துக்கள் உள்ளன. அதாவது கலாசாரம், மதம், கல்வி என்பவற்றில் தலையிடாமை. ஜேர்மன், இத்தாலி, பிரான்ஸ், போன்ற நாடுகளில் பல இனச் செல்வாக்குள்ள பிரதேசங்கள் உள்ளன. அவர்களது சிறப்பான தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டியதென கருதி யாப்பில் சரத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இதன்படி இவர்கள் உள்ளூர் விடயங்களைக் கவனிக்க முடியும்.

**தனித்துவ சமூக அமைப்பு**

கியூபெக்கில் வாழும் 25%மான பிரான்ஸிய மக்களுக்கு தனித்துவமான சமூக அமைப்பு என்ற அங்கீகாரத்தை அது வழங்கியுள்ளது. இதன் மூலம் கனடாவின் சமஷ்டி அரசியல் யாப்பானது பிரான்ஸிய கனேடியர்களது சுயாட்சிக்கானதொரு தனித்துவமான நடவடிக்கையென கியூபெக் மாகாணத்திற்கும் அதிகாரம் வழங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. தமது மாகாணத்திற்குள் வேறுபட்ட மொழி, கலாசாரத்தை அதிகரிக்கும் சுதந்திரத்தையும் கியூபெக் மாகாணம் பெற்றுள்ளது. கியூபெக் தனது சனத்தொகை விகிதாசாரத்திலும் பார்க்க 5% ற்கும் அதிகமாகப் புதியவர்களை குடியேற்றும் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறது. இது தொடர்பாக கனேடிய மத்தியரசிற்கும் கியூபெக் மாகாணத்திற்கும் இடையில் அரசியல் யாப்பு ரீதியான உடன்பாடு காணப்படுகிறது. கியூபெக் மாகாணத்திற்குள் தமது மொழி, கலாசாரம் என்பவற்றைப் பேணிப் பாதுகாக்கும் முக்கிய கடமைப்பாட்டினை கியூபெக் இன்றும் கொண்டிருக்கிறது. கியூபெக்கின் தனித்துவ சமூகம் என்ற அங்கீகாரமானது சட்ட, சமூக, கலாசார, பொருளாதாரத் துறைகளின் ஒன்றுபட்ட தன்மையினை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

**அரசியல் யாப்பு எற்பாடுகள்**

இன்று கியூபெக்கிலுள்ள ஆங்கில மொழி பேசுவோரையும் கியூபெக்கிற்கு வெளியில் உள்ள பிரெஞ்சு மொழி பேசுவோரையும் கருத்தில் எடுத்து அவர்களுக்கிடையில் பரஸ்பரத்தை எற்படுத்தும் வகையில் அரசியல் யாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கனடாவின் உயர் நீதிமன்றத்திலும் கியூபெக் மாகாணத்தைச் சேர்ந்த மூன்று நீதியரசர்கள் பங்குபற்றுவதும் கியூபெக் மாகாண மக்களின் தனித்துவத்தையும் உரிமைகளையும் பாதுகாக்கும் சிறந்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர். தேசங்களது சமத்துவம் என்ற வகையில் கியூபெக் மாகாணம் கனடாவின் ஏனைய மாகாணங்களோடு புதிய உறவுகளையும் ஏற்படுத்தியுள்ளது. கியூபெக் தனது சட்டங்களை ஆக்கவும் வரிகளை அறவிடவும், பரிபாலிக்கவும், வெளிநாட்டு உறவுகளை எற்படுத்தவும் கூடிய அதிகாரங்கள் காணப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் கியுபெக் மாகாணம் பொருளாதார வளர்ச்சி, பொருளாதார அபிவிருத்தி மற்றும் கியூபெக் மக்களது அரசியல் அறிவு என்பவற்றினூடகவே தமது சமூகத்தின் தனித்துவம், வரலாறு, கலாசாரம் என்பவற்றைப் பாதுகாத்துள்ளது எனலாம். கியூபெக் தமது சுயநிர்ணய உரிமையினை அரசியல் யாப்பு சட்டத்தின் மூலமும் மனித உரிமைகளினூடாகவும் பெற்றுள்ளது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

# முஸ்லிம் மக்களுக்கும் சகல உரிமைகளும் அவசியம்

யூ.எல்.எம். மொஹிதீன்
முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் குழு உறுப்பினர்

**ஒஸ்லோவில் ஏற்பட்ட உடன்படிக்கையின் பின்னணியில் இறுதி அரசியல் தீர்வை நோக்கமாகக் கொண்ட பொருண்மைப் பேச்சுவார்த்தைகள் சூழமைவில் இச்செயல்முறையில் முஸ்லிம்களின் தேவைகளை வரைவிலக்கணப்படுத்துவது எவ்வாறு?**

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை இன அடிப்படையிலேயே தீர்க்கப்பட வேண்டும். தற்பொழுது சமஷ்டிமுறை ஒன்று குறித்துப் பேசப்படுகின்றது. அப்படியாயின் இலங்கையில் வசிக்கும் பிரதான இனக்குழுக்களை அடையாளம் காணுதல் வேண்டும். சிங்களவர், இலங்கைத் தமிழர், முஸ்லிம்கள் மற்றும் சமீபத்தில் இந்திய வம்சாவளி மக்கள் தான் இந்த இனக்குழுக்கள் ஆவர். நாங்கள் அதிகாரத்தைப் பகிர்வு செய்வதாயின், இனக்குழுக்களுக்கு அதிகாரம் கிட்ட வேண்டும். முஸ்லிம்களும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் இனக்குழு ஆவர். எமக்கும் எமது சொந்தப் பிரச்சினைகள் உள்ளன. நாமும் சிங்கள மக்களுடன், தமிழ் மக்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும். அதுவே பிரதானமான விடயமாகும். எல்ரீரீஈ அமைப்பு தற்போது ஈழத்துக்குப் பதிலாக வடக்கு-கிழக்குச் சுயாட்சி வலயமொன்றை ஏற்றுக்கொள்வதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளது. இந்த ஆட்புலம் தமிழ்பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வசிப்பிடமென்று அவர்கள் தெரிவிக்கின்றனர். அதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. தமிழ் பேசும் மக்கள் என்பது ஒரு மொழி ரீதியான வேறுபாடு ஆகும். முஸ்லிம்களாகிய நாம் ஒரு தனி இனக்குழு ஆவோம். ஆகையால் வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் விசேஷமாக இலங்கைத் தமிழர்களினதும் இலங்கை முஸ்லிம்களினதும் பாரம்பரிய வசிப்பிடங்களாகும்.

எல்ரீரீஈ அமைப்பும் நாம் தமிழ் பேசும் பிரதேசங்களில் அதிகாரத்தின் பங்குதாரராக முடியுமென்று தற்போது தெரிவித்துள்ளது. அது ஒரு பழைய விடயமாகும். இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் நாம் அனைவரும் சமமானவர்கள். நாம் உரிமைகளைப் பொறுத்தவரையில் சமமானவர்கள் அல்லர். அதனால், இவ்வாறு கூறுவதில் அர்த்தமில்லை. எம்மிடையே சமத்துவம் இல்லாமை காரணமாகவே 20 வருடகாலமாக யுத்தம் இடம்பெற்றது.

> சிங்களவர், இலங்கைத் தமிழர், முஸ்லிம்கள் மற்றும் சமீபத்தில் இந்திய வம்சாவளி மக்கள் தான் இந்த இனக்குழுக்கள், முஸ்லிம்களும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் இனக்குழு ஆவர்.

**முஸ்லிம் மக்கள் இனரீதியாக வேறுபட்ட ஒரு குழுவொன்றும், மொழிக்குழு அல்லவென்றும் நீங்கள் தெரிவிக்கின்றீர்கள் இது எவ்வாறு?**

சிங்களவர் எம்மைச் சோனகர் என்று அழைக்கின்றனர். அது சமஸ்கிருத மற்றும் பாளி மொழிகளில் அராபிய மக்கள் என்பதைக் குறிக்கும் 'யொன்' என்னும் பதத்திலிருந்து திரிபடைந்த ஒன்றாகும். அவ்வாறே தமிழிலும் 'சோனகம்' என்பது அராபி என்றும் கருத்திலாகும். ஆகவே, இந்த நாட்டின் முஸ்லிம் மக்கள் அராபிய மூலத்தைக் கொண்ட இலங்கையின் இனக்குழு ஆவர்.

**நீங்கள் முஸ்லிம் மக்கள் தனித்துவ**

**அடையாளத்துடன் இந்த நாட்டின் அரசியல் நீரோட்டத்திலும் நிறுவனங்களிலும் பிரதிநிதித்துவம் பெறவேண்டுமென்று கூறுகின்றீர்கள். அப்படியாயின் முஸ்லிம்களைப் பற்றி எதுவுமே கூறாமல் தமிழ் மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமை பற்றித் தெரிவிக்கும் ஒஸ்லோ பிரகடனத்தை நீங்கள் எவ்வாறு நோக்குகின்றீர்கள்?**

இப்பிரகடனம் வெளியிட்டபோது நானும் ஒஸ்லோவில் இருந்தேன். இப்பிரகடனத்தின் அடிப்படை திம்புக்கோட்பாடுகள் ஆகும். அவை தமிழ் தேசியத்துவம், பாரம்பரிய தாயகம் மற்றும் சுயநிர்ணய உரிமை என்பவற்றை ஏற்றுக்கொள்வதை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

2002 ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பிரபாகரன் முஸ்லிம்கள் தனியான இனக்குழுவினர் என்று தெரிவித்திருந்தார். அவர்கள் தனியான ஒரு தேசிய இனமென்றும் கூறியிருந்தார். தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய சகல உரிமைகளும், பயன்களும் முஸ்லிம் மக்களுக்கும் அதே ரீதியில் கிட்ட வேண்டும். அவர்களின் பாரம்பரிய வசிப்பிடங்களையும் அங்கீகரித்தல் வேண்டும்.

தமிழர்கள் போராடி, உயிர்த்தியாகங்கள் செய்த காரணத்தால் அவர்களுக்கு மேலதிக உரிமைகள் கிட்டவேண்டுமென்ற அவசியமில்லை. அதே வேளையில் முஸ்லிம்களும் பல கஷ்டங்களை அனுபவித்துள்ளனர்.



**முஸ்லிம்கள் விஷேடமாக ஜனநாயகச் சட்டத்தினுள் எவ்வாறு இனப்பிரச்சினைகளை முன்னெடுக்கவுள்ளனர்?முஸ்லிம்கள் இந்த நடுநாயகமான பிரச்சினைகளை இன்னமும் புரிந்துகொள்ளவில்லையென்பதை மிகவும் கவலையுடன் தெரிவித்துக் கொள்ள வேண்டும். முஸ்லிம்களுக்கு என்ன நடக்கும்? முஸ்லிம்கள் இந்த உடன்பாட்டை ஏற்றுக்கொள்வார்களா?**

முஸ்லிம் போராளிகள் உருவாகக்கூடும் என்ற கவலை எனக்கும் உள்ளது. இதுவே உண்மையான நிலைமை ஆகும். கிழக்கின் முஸ்லிம்கள் நாட்டின் சனத்தொகையில் இரண்டரை வீதம் அல்லது மூன்று வீதம் ஆவர். இச்சிறுபான்மையினருக்கு என்ன நடக்கும்? அதுவும் ஒரு கவலை தரும் விடயமாகும்.

நாம் அனைவருடனும் சேர்ந்து வாழவேண்டும். ஆயினும், அதற்கு முன்னராக நாம் எமது உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் இல்லையா? கடந்த இருபது வருட காலமாக கிழக்கின் முஸ்லிம் மக்கள் தமிழரின் ஆதிபத்தியத்திற்குக் கீழ்ப்படிந்திருந்தனர். எல்ரீரீஈ, ஈபீஆர்எல்எவ், டெலோ மற்றும் புளொட் அமைப்புக்கள் எதுவாகவிருந்தாலும் நிலைமையில் வித்தியாசம் எதுவும் இருக்கவில்லை.

**இந்த நிலைமைகளின் கீழ் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதி செய்யக்கூடிய புதிய அரசியலமைப்பின் நிறுவன ரீதியான தன்மை எவ்வாறு அமைந்திருத்தல் வேண்டும்?**

முதலில் சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களாகிய நாம் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். நாம் பல்வேறு சமஷ்டி முறைகளை ஆய்வு செய்யலாம். சமஷ்டி அமைப்பு ஒன்றுக்கு அடிப்படை நியாயமாக அமைவது மக்கட் தொகை அல்லவென்பதை அனுபவம் எமக்கு எடுத்துக்காட்டுகின்றத. இந்த அடிப்படையில் முஸ்லிம் மக்களுக்கும் அதிகாரப்பகிர்வு இடம்பெற வேண்டும். (நீண்ட உரையாடலில் தெரிவு பெற்ற பகுதிகள்)

# நீங்கள் நாடும் வலிமை...



வாழ்க்கையில் ஏற்படும் அபாயகரமான இடர்களுக்கு
ஏற்ப உங்கள் வரும்படிகளைக் கவனமாகச் சமப்படுத்தி,
வாழ்க்கையில் உங்கள் நீண்டகால இலட்சியங்களை
வென்றடைய வேண்டுமென்ற உங்கள் நாட்டத்தை
நாம் நன்றாகவே புரிந்து கொள்கிறோம்.
இலட்சியங்கள் மாறக் கூடியவை. தேவைகள்
உருவாகும்போது எதிர்பார்ப்புகளும் மாறுகின்றன.
பின்வரும் முதலீட்டு வாய்ப்புகள் உங்களுக்காக
இப்போது உள்ளன.

**ஈகிள் மியுசுவல் நிதியங்கள்:** பலதரப்பட்ட முதலீட்டுவாய்ப்புகள், பணப்புழக்கம் மற்றும் அதிக வரும்படிகள் ஆகியவற்றைத் தரக்கூடியதாக உருவாக்கப்பட்டுள்ளன.

- **ஈகிள் கில்ற் எட்ஜ் நிதியம்** - கடன் அபாயம் இல்லாத திறைசேரி உண்டியல் பத்திரங்களிலும் திறைசேரிப் பிணைப்பத்திரங்களிலும் மாத்திரமே உங்கள் பணம் முதலீடு செய்யப்படும்.
- **ஈகிள் இன்கம் நிதியம்** - இது அரச பிணைப் பத்திரங்களைக் கூட்டுக் கடன்பத்திரங்கள், வணிக உத்தரவாதப் பத்திரங்கள் போன்றவற்றுடன் வெகு கவனமாகப் பிணைக்கின்றன.
- **ஈகிள் குறோத் நிதியம்** - இது முற்றிலும் வணிகத்துறைப் பங்குகளில்தான் முதலீடாகிறது. அதனால், வெற்றிநடைபோடும் கம்பனிகளில் முதலீடு செய்யும் வாய்ப்பைத் தருகிறது.

**பங்கு முதலீட்டு முகாமைத்துவ சேவைகள்** - முதலீட்டு முகாமைத்துவத்தில் எமது தொழில்சார் அணுகுமுறையானது, விலைமாறுதல், வட்டி வீதங்கள், பங்குச் சந்தை நிலைமைகள் அடிக்கடி மாறுவதையே இயல்பாகக் கொண்ட சந்தைச் சூழலில் உங்கள் வரும்படி இலாபத்தை மிகைப்படுத்த உதவுகிறது.

**நீங்கள் நம்பக்கூடிய திடநிலையும் நிபுணத்துவமும் என்பதே எமது வாக்குறுதி**

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் கூப்பனை நிரப்பி
ஃபக்ஸில் அல்லது தபாலில் அனுப்புங்கள்.
**ஈகிள் NDB நிதிய முகாமைத்துவ கொம்பனி லிமிற்றெட்**
ஈகிள் இல்லம் 75 குமாரன் ரட்ணம் வீதி கொழும்பு 2
ஃபக்ஸ் : 310131 தொலை : 310100
மின்அஞ்சல் : info@eaglendb.com

**உடனே முயற்சியுங்கள்! ஒவ்வொரு கணமும் பெறுமதியானது !**

தயவுசெய்து ஈகிள் NDB நிதிய முகாமைத்துவ
சேவை பற்றி விபரங்களை அனுப்பவும்.

பெயர் ______________________

______________________

______________________

முகவரி ______________________

______________________

______________________

______________________

தொலை. ______________________

ஃபக்ஸ் ______________________

மின் அஞ்சல் ______________________

Eagle
NDB

ஈகிள் NDB நிதிய முகாமைத்துவ கொம்பனி லிமிற்றெட்

சூறிக் பினான்சியல் சேவிசஸ் குழுவின் உறுப்பினர்

Globe - Col. 10 Tel/Fax: 329739